பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 31 செவ்வாய்க்கிழமை (16.09.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 293

# லொட்ஜுகள், தற்காலிக வசிப்பிடங்களில் தங்கிய தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கைதாகித் தடுத்து வைப்பு!

## உத்தியோகபூர்வ அறிவிப்பு வருமுன்னரே பொலிஸார் வேட்டை!!

கொழும்பு, செப். 16

கொழும்பில் லொட்ஜுகள் மற்றும் தற்காலிக வசிப்பிடங்களில் தங்கியிருந்த 50க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள், யுவதிகள் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு பல பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை முதல் லொட்ஜுகள், தற்காலிக வசிப்பிடங்களில் தேடுதல் நடத்திய பொலிஸாரும் படையினரும் இவர்களைக் கைதுசெய்து தடுத்து வைத்துள்ளனர்.

பேலியகொடவில் 9 பேரும், டாம் வீதியில் 8 பேரும், ஆட்டுப்பட்டித்தெருவில் 9 பேரும், மருதானையில் 8 பேரும், கொட்டாஞ்சேனையில் 6 பேரும், கிராண்ட்பாஸில் 6 பேரும், தெமட்டகொடயில் 7 பேரும் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என முறையிடப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்டவர்கள் பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பில் தற்காலிகமாகத் தங்கும், தக்க காரணம் இன்றித் தங்கும் தமிழர்கள் வெளியேற வேண்டும் அல்லது வெளியேற்றப்படுவர் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அரசாங்கப் பத்திரிகை (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பிரதேசத்திலிருந்து

# ஐ.நா. தொண்டு அமைப்புகள் இன்று வெளியேறுகின்றன!

## ஓமந்தை வரை புலிகள் பாதுகாப்பு உத்தரவாதம்

கொழும்பு, செப்ரெம்பர் 16

இதுவரை காலமும் வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வந்த ஐக்கிய நாடுகள் சபையின் தொண்டு அமைப்புகள் - முகவர் நிலையங்கள் - தமது மூடை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு அங்கிருந்து இன்று முற்றாக வெளியேறுகின்றன - வவுனியாவுக்குச் செல்கின்றன.

வாகனத் தொடரணியாக வெளியேறும் ஐ.நா. தொண்டு நிறுவனப் பணியாளர்களுக்கும் வாகனங்களுக்கும் ஓமந்தை வரைக்கும் விடுதலைப் புலிகள் பாதுகாப்பு வழங்குவர்.

வாகனத் தொடரணி இன்று (செவ்வாய்) முற்பகல் 10 மணி தொடக்கம் கிளிநொச்சியிலிருந்து புறப்படும்.

இலங்கைக்கான ஐ.நா. பேச்சாளர் கோர்டன் வைஸ், மேற்படி ஏற்பாடு குறித்த தகவலை நேற்றிரவு தெரிவித்தார்.

ஐ.நா. அமைப்புகளின் வெளியேற்றம் குறித்து கோர்டன் வைஸ் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சிப் பிரதேசத்தில் மீதமாக இருக்கின்ற ஐ.நா. சபையின் மனிதநேயப் பணியாளர்கள் அனைவரும் பாதுகாப்பாக வெளியேறுவதற்கான உறுதிமொழியை விடுதலைப் புலிகள் அளித்திருக்கிறார்கள்.

எமது பணியாளர்கள் அனைவரையும் நாளை (அதாவது இன்று) செவ்வாய்க்கிழமை 10 மணிக்கு ஒரே வாகனத் தொடர (12ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றியம் வருத்தம்!

இலங்கையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலிருந்து மனிதநேய அமைப்புகளை வெளியேறுமாறு அரசு விடுத்துள்ள உத்தரவு காரணமாக ஆயிரக்கணக்கான பொதுமக்கள் அத்தியாவசிய மனிதாபிமான உதவிகளை (12ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை படைமுகாம் மீது ஷெல் தாக்குதல்; ஒருவர் பலி

அம்பாறை மாவட்டம் கஞ்சிக்குடிச் சாறு வனப்பகுதியில் உள்ள சிறப்பு அதிரடிப் படையினரின் முகாம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய மேட்டார் ஷெல் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## இம்மாதம் 29 ஆம் திகதிக்குப் பிறகும் தங்கும் அமைப்புகள் மீது நடவடிக்கை

### வன்னியில் உள்ள தொண்டு நிறுவனங்களுக்கு அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, செப்டெம்பர் 16

இலங்கை அரசின் உத்தரவை நிராகரித்துவிட்டுத் தொடர்ந்தும் வன்னியில் செயலாற்றும் ஐ.நா. அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அந்நிறுவனங்கள் இம்மாதம் 29ஆம் திகதிக்குள் அங்கிருந்து வெளியேறாவிட்டால் அவற்றின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் கிடையாது.

அரசின் இந்த நிலைப்பாட்டை மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:- (12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். உயர் பாதுகாப்பு வலயத்தில் 24 குடும்பங்கள் மீளக் குடியமர்வு

கொழும்பு, செப். 16

யாழ்ப்பாணம் உயர் பாதுகாப்பு வலயத்தில் 24 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டிருக்கின்றன என நேற்று உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு வலயப்பிரகடனத்தில் வீடு, வாசல்களில் இருந்து துரத்தப்பட்ட பொதுமக்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதியரசர்கள் ஷிராணி திலகவர்த்தனா, நிமால் காமினி அமரதுங்க ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நீதிமன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

அநாவசியமான நபர்கள் இக்காணிகளுள் அத்துமீறி நுழைந்துவிடாமல் இருப் (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களின் நிலைமை; இந்தியா ஆழ்ந்த கவலை!

புதுடில்லி, செப்.16

விடுதலைப்புலிகளுக்கு எதிராக இலங்கை இராணுவம் மேற்கொண்டுள்ள நடவடிக்கையில் சிக்கியுள்ள வன்னி மக்கள் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது.

அந்த மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் புதுடில்லி கொழும்பிடம் கேட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# அக்கராயனுக்குத் தெற்கே இரு தரப்பும் கடும் சண்டை

கொழும்பு, செப்.16

வன்னியில் அக்ராயனுக்குத் தெற்கே நேற்று அதிகாலை முதல் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடுமையான சண்டைகள் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

அக்கராயனைக் கைப்பற்றும் நோக்குடன் திங்கட்கிழமை இராணுவம் மேற்கொண்ட பாரிய முன்னகர்வு முயற்சியை தாங்கள் முறியடித்துள்ளனர் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

அதிகாலை முதல் அக்கராயனுக்குத் தெற்கே 6 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பகுதியொன்றில் மோதல் இடம்பெற்றதாகவும், அதன்போது இராணுவத்திற்குப் பாரிய உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் விடுதலைப் புலிகள் நேற்றுமாலை தெரிவித்தனர். (12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உயிர் அச்சுறுத்தல் காரணமாக நேற்று மனித உரிமை ஆணைக்குழுவில் மூவர் சரண்

## அவர்களில் இருவர் புத்தூர் வாசிகள்

யாழ்ப்பாணம், செப்.16

உயிர் அச்சுறுத்தல் காரணமாக கைதடி, புத்தூர் பகுதிகளைச் சேர்ந்த மூவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சரண் அடைந்துள்ளார்கள். இவர்களில் ஒருவர் பெண்.

கைதடி வடக்கு, கைதடியைச் சேர்ந்த 20 வயதுடைய இளம் பெண் ஒருவரும் தமக்கு உயிர் அச்சுறுத்தல் உண்டு எனக் கூறி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சரண் அடைந்தார்.

நவக்கிரி மேற்கு, புத்தூரைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவரும் மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று சரண் அடைந்துள்ளனர்.

சரண் அடைந்த சகோதரர்களில் ஒருவருக்கு வயது - 31 மற்றவருக்கு 27 வயதாகும்.

இம்மாதம் 8 ஆம் திகதி புத்தூர் நவக்கிரியில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்த ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தாயும் மகளும் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அந்தத் தாயின் இரு மகன்மார்களே இப்போது மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று சரண் அடைந்திருக்கின்றனர். (அ-1-25)

## பன்னிரண்டாம் ஆண்டில் நீங்கா நினைவலைகள்

மலர்வு 01 ★ 10 ★ 1939



உதிர்வு 16 ★ 09 ★ 1996

### அமரர் பூதர் இரத்தினம்
### (ஓய்வு பெற்ற ஊழியர், காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபனம்)

அன்பு காட்டிய அப்பாவே!
குடும்பத்தை வழிநடத்திய தலைவனே
எம்மை வாழவைத்த தெய்வமே
எம்மை விட்டு பிரிந்து - ஆண்டுகள்
பன்னிரண்டு கடந்தாலும் மறக்கமுடியவில்லை
உம் நினைவுகளை. உம் ஆத்மா சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்

துர்க்காமில் அருகில்,
பொன்னாலை வீதி,
மானிப்பாய்.

என்றும் நினைவகலா
குடும்பத்தினர்.

## வேலையாள் தேவை

**Topworld com and Browsing Center**

தமிழ், ஆங்கிலம் Typing தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை. தகுதியுடையோர் தகுந்த ஆவணங்களுடன் நேரில் வரவும்.

(16.09.2008 தொடக்கம் - 20.09.2008 வரை காலை 9.00 - 11.00 மணி வரை)

**768 B, பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தி, நல்லூர். T.P. 021 222 8605**

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறோயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம் தொகையாக கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.

உதயன் பாம் நாயன்மார்கட்டு (முறிவு நெரிவு வைத்தியசாலைக்கு அருகில்)

## உடன் தேவை

கடந்த 13.09.2008 சனிக்கிழமை உதயன் பத்திரிகையின் 2ஆம் பக்கத்தில் வெளியாகிய ''உடன் தேவை'' விளம்பரத்தில் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள் மாற்றப்பட்டுள்ளன. அவை வருமாறு:- 0214591502, 0771727904

விளம்பரதாரர்.

## தவறிவிட்டது

14.09.2008 ஞாயிற்றுக்கிழமை செல்வச் சந்நிதி தேர்த்திருவிழாவின் போது தேரின் இருப்பிடத்திற்கு சமீபமாக கையடக்கத் தொலைபேசி ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. (NOKIA 1110 - மொடல்) கண்டெடுத்தவர்கள் இல. 281, கண்டி வீதி, யாழ்ப்பாணம். T.P. No. 0774913399 என்னும் முகவரி, தொ.பே.இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தந்துதவவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

தேசிய மட்டத்தில் தொடர்ந்தும் பதக்கம் பெற்று வெற்றிவாகை சூடி கல்லூரிக்கு பெருமை சேர்த்த எமது உடற் பயிற்சி அணியினருக்கும், அவர்களை பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர்களுக்கும், தமிழ்த்தினப் போட்டியில் மாகாணமட்டத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ள இசைக்குழு அணியினருக்கும், அவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும், இம்முறை பல்கலைக்கழக அனுமதியைப் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்த மாணவிகளுக்கும், அவர்களை கற்பித்து, அறிவூட்டிய அதிபர் ஆசிரியர்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

பல்கலை அனுமதி பெற்றோர்

செல்வி. கி. கஸ்தனா
செல்வி. ந. விஜிதா
செல்வி. சி. செல்வமலர்
செல்வி. ச. மயூரிகா
செல்வி. ச. கிரிஷிகா
செல்வி. வ. நிவேதிகா
செல்வி. கி. வாசுகி
செல்வி. வி. சாம்பவி
செல்வி. சு. சாந்தரூபி
செல்வி. இ. நிசாந்தி
செல்வி. வி. விஷ்ணுகா
செல்வி. செ. றோகினி
செல்வி. ச. றேகா
செல்வி. அ. ஜெயரூபி
செல்வி. அ. டினோஷினி
செல்வி. செ. உஷாநந்தினி
செல்வி. ப. ஜயனி
செல்வி. இ.கிறிஸ்ரியானா
செல்வி. பொ. திபகா
செல்வி. அ. கிதாஞ்சலி
செல்வி. இ. வினோபா

கல்லூரிச் சமூகம் பா.அ.சங்கம், ப.மா.சங்கம், யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 22 . 02 . 1937



உதிர்வு 16 . 08 . 2008

### அமரர் சங்கரப்பிள்ளை லோகசுந்தரம்

கடந்த 16.08.2008 அன்று கனடாவில் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டி கிரியைகளும், மதியபோசன நிகழ்வும் 20.09.2008 அன்று கனடாவிலும், சுவிஸிலும் நடைபெறும்.

மகன்:- ரகுபவன் (கனடா) 416- 2999430
மகள்:- சுவர்ணா (சுவிஸ்) 0041443221159

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# மரண அறிவித்தல்



## திருமதி சிவகாமி மகாதேவன்
### (ஓய்வு பெற்ற தபாலதிபர்)
### (முன்னாள் அறங்காவலர் சபை உறுப்பினர் - நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயம்)

நயினாதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை (மெனிங் பிளேஸ்) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாதேவன் சிவகாமி 11.09.2008 வியாழக்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி மகாதேவன் (ஓய்வு பெற்ற தொலைத்தொடர்பு பரிசோதகரும், கொழும்பு R.P மொனபல உரிமையாளரும்) அவர்களின் பாசமிகு மனைவியும், சத்தியரூபனின் (M.S.R. - Accounting U.K) பாசமிகு தாயாரும், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தான ஆதீன கர்த்தா காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - தில்லைவனம் தம்பதியினரின் பாசமிகு மகளாரும், நெடுந்தீவைச் சேர்ந்த ஓய்வு பெற்றவர்களான தபாலக ஊழியர் சின்னத்தம்பி - பராசக்தி தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான நடராஜா, ஓய்வு பெற்ற தபாலதிபர் செல்லத்துரை, இராசம்மா, கணபதிப்பிள்ளை, கந்தையா, செல்லம்மா, கார்த்தியேசு, கதிரேசு, நாராயணபிள்ளை, ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகஸ்தர் விசுவலிங்கம், சிவபாக்கியம் மற்றும் ஓய்வுபெற்ற தபாலதிபர் இராசரெத்தினம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், லோகேஸ்வரி, ஓய்வுபெற்ற வைத்தியசாலை காவலாளி பாலசிங்கம் (இந்தியா), ஓய்வுபெற்ற இ.போ.ச. நடத்துனர் சண்முகநாதன், தில்லைநாதன் (நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஓய்வு பெற்ற ஊழியர்), சித்ச்சபாநாயகி, கருணாமூர்த்தி (சுவிஸ்), வசந்தகுமாரி, உதயகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத் துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.09.2008) புதன்கிழமை அவரது நயினாதீவு இல்லத்தில் மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சல்லிப்பரவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்:
சி.மகாதேவன் (கணவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாந்திகம் நிறுவனத்தின் 'உளவிருத்திக் குறைபாட்டை விளங்கிக் கொள்ளல்' என்னும் நூல் வெளியீட்டுவிழா நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும்-

சாந்திகத் தலைவர் செறேமி லெனட், வைத்திய கலாநிதி எஸ்.சிவயோகன் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

குழந்தைகள் வைத்திய நிபுணர் எஸ்.கே.அருண்மொழி மகப்பேற்று வைத்திய நிபுணர் ரி.பவானியிடமிருந்து நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொள்வதை நான்காவது படத்திலும் காணலாம். *(படங்கள்: லக்ஷ்மன்)*

# மாணவர்களுக்கு வழங்கப்படும் புத்தகங்கள் உரிய வகையில் பயன்படுத்தப்படுவதில்லை

## வலயக் கல்விப்பணிப்பாளர் கவலை

நல்லூர், செப்.16

பாடசாலைகளுக்குத் தரமான பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்ற போதிலும் மாணவர்கள் அவற்றை உரியமுறையில் பயன்படுத்துவது இல்லை என்று யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கவலை தெரிவித்துள்ளார்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா கல்லூரி அதிபர் திருமதி வே. பேரின்பநாதன் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வலயக்கல்விப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

நான் பொதுவாக எனது நண்பர்கள், உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களது பிள்ளைகளின் கல்வி நிலைமை குறித்துக் கேட்பது வழமை.

மாணவர்களுக்கு வழங்கப்படும் பாடநூல்களையும் பார்ப்பதுண்டு.

பெரும்பாலானவர்களிடம் குறிப்பிட்ட பாடநூல்கள் பயன்படுத்தப்படாமல் புதியதாக இருப்பதை அவதானித்துள்ளேன்.

தரம்மிக்க இந்த நூல்களின் பெறுமதி உணரப்படாத நிலைமை கவலைக்குரியதே.

பெற்றோர் இது குறித்து தங்கள் பிள்ளைகள் மீது அக்கறை செலுத்த வேண்டும்.

மாணவர்கள் இந்த நூல்களை முழுமையாகப் பயன்படுத்தினால் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்ல வேண்டிய தேவை இல்லை.

ஆசிரியர்கள் தமது துறைசார்ந்த பகுதிகளில் பட்டம் பெறவேண்டும். தரமான உள்ளீடுகளைப் பெறுவதற்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்கின்றது.

ஆசிரியர்கள் தமக்குத் தேவையான பாடங்களைத் தயார்படுத்தி அதற்குத் தேவையான உள்ளீடுகளைப் பெற இந்த நிதி பயன்படுத்தப்பட் வேண்டும்.

பாடசாலையில் இனங்காணப்படும் எந்த ஒரு பிரச்சினையையும் பெரிய பிரச்சினை என்று ஒதுக்கிவிடாது அதற்கமைய தீர்வு காணக்கூடியதாக இந்த நிதியைப் பயன்படுத்த முடியும்.

அதிபர், ஆசிரியர்கள், ஏனைய பணியாளர்கள் ஒருங்கிணைந்து தமது பாடசாலையின் குறைபாடுகளை ஆராய்ந்து அவற்றுக்குத் தீர்வு காண்பதற்குரிய முயற்சியை மேற்கொள்ளலாம்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி, சமூகத்துக்கு உகந்த மக்களை உருவாக்கி வருகின்றது.

கல்லூரியின் வளர்ச்சிக்கும் தேவைகளுக்கும் முடிந்த உதவிகளை வழங்க நாங்கள் தயாராகவே உள்ளோம் - என்றார். (203-111)

### சிக்கன மின் குமிழ்கள் விநியோகம்

சங்கானை, செப்.16

வலி.மேற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம் தமது ஊழியர்களுக்கு சிக்கன மின்குமிழ்களை விநியோகித்துள்ளது.

380 சிக்கன மின்குமிழ்கள் இவ்வாறு விநியோகம் செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது. (203-29)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## வேலணை வங்களாவடிச் சந்தியில் பால்சாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், செப்.16

வேலணை வங்களாவடிச் சந்தியில் பால்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

நவீன இயந்திர சாதனங்களின் உதவியுடன் இப்பால்சாலையில் பால்கோப்பி, நெஸ்கோப்பி மற்றும் இதர சுவையூட்டிய பால்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

வேலணை ப.நோ.கூட்டுறவு சங்கம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

வேலணைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் உற்பத்தி செய்யப்படும் பசுப்பால் இதற்கென நேரடியாகக் கொள்வனவு செய்யப்படுகின்றது.

அப்பாலை உடனே சூடாக்கி உணவாக வழங்கக் கூடிய வகையில் நவீன கருவிகள் கொண்ட இயந்திர சாதனங்களும் இங்கு அமைக்கப்பட்டுள்ளன. கடந்த 10 ஆம் திகதி பால்சாலை ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. இதனால் பெருமளவானோர் பயன்பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (203-95)

### பேக்கரிகள் அனைத்திற்கும் செயலகத்தால் கோதுமைமா விநியோகம்

யாழ்ப்பாணம், செப்.16

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் அனைத்து பேக்கரிகளுக்கும் தேவையான அளவு கோதுமை மா யாழ்.செயலகத்தால் விநியோகம் செய்யப்பட்டுள்ளது என்று அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

எனவே, பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எவையும் பேக்கரிகளுக்கு மா விநியோகம் செய்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனைக் கண்காணிக்குமாறும் பிரதேச செயலர்கள், யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (203-300)

# யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிச் சமாசம் சுழற்சிமுறை கூட்டு நிதியத்தை அறிமுகப்படுத்துகிறது

## அங்கத்துவ அமைப்புகளை இணையுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.16

யாழ்.மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிச் சமாசம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் வசதி கருதி சுழற்சி முறைக் கூட்டு நிதியம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நிதிப் பற்றாக்குறையால் எதிர்நோக்கும் சிரமங்களைத் தவிர்க்கும் முகமாக இந்த சுழற்சிமுறைக் கூட்டு நிதியம் ஒன்றை விரைவில் வங்கிச் சமாசம் ஆரம்பிக்கவுள்ளதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கூட்டு நிதியம் மாதாந்த பங்களிப்புத் தொகையாக பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களுக்கு ஒரு லட்சம் ரூபாவும் ஏனைய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இரண்டு லட்சம் ரூபாவும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டு நிதியத்தில் இணைந்து கொள்ளுமாறு தனது அங்கத்துவ மற்றும் இணை அங்கத்துவ கூட்டுறவு அமைப்புக்களை மேற்படி கிராமிய வங்கி சமாசம் கேட்டுள்ளது. (203-224)

### நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் விழிப்புலன் இழந்தவர்களுக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம்,செப்.16

யாழ்ப்பாணம், முதலாம் குறுக்கு வீதியில் இயங்கும் விழிப்புலன் இழந்தவர்களின் சங்கத்திற்கு நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தின் அறங்காவல் சபையினரால் நிதி அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதாக அந்தச் சங்கத்தின் செயலாளர் எவ்.கனகசபை தெரிவித்தார்.

நயினாதீவு நாகபூசணி ஆலயத்தில் வைத்து சங்கத் தலைவர் ஆ.மகேந்திரனிடம் கடந்த 7ஆம் திகதி 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இந்த நிதி சங்கத்தினதும் சங்க அங்கத்தவர்களதும் நலன் பேணும் பணிகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-302)

## யாழ்.மாவட்டத்திற்கான புத்தாக்கக் கண்காட்சி வேம்படி மகளிரில் இன்று ஆரம்பமாகிறது

நல்லூர்,செப்.16

இலங்கை புத்தாக்குநர் ஆணையத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்திற்கான புத்தாக்கக் கண்காட்சி இன்று செவ்வாய்க்கிழமை யும் நாளை புதன்கிழமையும் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கண்காட்சியை இன்று காலை 9மணிக்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைப்பார்.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கே.பொன்னம்பலம் புத்தாக்குநர் ஆணையத்திட்ட அலுவலர் பி.எம்.சோமசிங்க, மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் வீ.ரி.செல்வரத்தினம், வட பிரதேச இணைப்பாளர் செல்வி பி.ஸ்ரீகீதா, மாகாண பிரதி கல்விப் பணிப்பாளர் வி.ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் நிகழ்வில் உரையாற்றவுள்ளர்.

நாளை புதன்கிழமை நடைபெறும் இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா, யாழ்.பல்கலைக்கழக பௌதீகவியல் துறைத் தலைவர் என். சிவயோகன், புலமைச் சொத்து அலுவலர் திருமதி நந்தினி இராமநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

பரிசளிப்பு, சான்றிதழ் வழங்கும் நிகழ்வு என்பனவும் இடம்பெறும். (203-111)

### தீயணைப்பு சேவை மறு அறிவித்தல் வரை இடம்பெறமாட்டாது

யாழ்ப்பாணம், செப்.16

யாழ்.மாநகர சேவையின் தீயணைப்பு இயந்திரம் திருத்தவேலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால் மறு அறிவித்தல் வரை சேவை இடம்பெறமாட்டாது என்று மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு அறிவித்துள்ளது. (203)

## நூல் வெளியீடும் கலை விழாவும்

யாழ்ப்பாணம்,செப்.16

தென்மராட்சிக் கலைமன்ற ஆதரவில் சுபாலயம் நடத்தும் நூல் வெளியீடும் கலை விழாவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பதிவாளர் க.மோகனராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கலந்து கொள்வார். (203)

### கொழும்புத்துறை மேற்கில் வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், செப்.16

நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் இருந்த கொழும்புத்துறை மேற்கு, விதானையார் வீதி தார் ஊற்றி புனரமைக்கப்பட்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகாலமாகப் போக்குவரத்து செய்யமுடியாத அளவுக்கு குன்றும் குழியுமாக இருந்த இந்த வீதியை புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் யாழ். மாநகராட்சி மன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

தற்போது இந்த வீதி புனரமைக்கப்பட்டு வீதியில் இரு மருங்கிலும் காணப்பட்ட பற்றைகள் மற்றும் புற்கள் என்பன வெட்டி அழிக்கப்பட்டுள்ளன. (203-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



We cordially welcome our new Director
Mr.Kathiramalai M.A,
B.Com, P.G.Dip-in Edu,
HNDC.

HNDM 1st,2nd year students.
Advanced Technological Institute,
*Jaffna.*

## தவறிவிட்டது

வியாபாரிமூலை, பருத்தித்துறை என்னும் முகவரியுடைய திருச்செல்வம் -தினேஷ் என்பவரது தே.அ.அ (890762719 V), பாடசாலை அ.அட்டை என்பன 11.09.2008 அன்று வியாபாரி மூலை இன்பசிட்டி சித்திவிநாயகர் ஆலயப் பகுதியில் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வியாபாரிமூலை உபதபால் அலுவலகத்தில் ஒப்படைத்துதவவும். (78483)

## திருமணசேவை

எங்களிடம் டாக்டர், எஞ்சினியர், வெளிநாட்டு, உள்நாட்டு மணமக்கள் உண்டு. எல்லா மதத்தினருக்கும் உண்டு.

தொடர்புகளுக்கு:
**துர்க்கா திருமண சேவை,**
*9, சங்கிலியன் வீதி, நல்லூர்.*
T.P.021 4591417 (78484)

## தவறிவிட்டது

இல.15, 2ஆம் ஒழுங்கை, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய டெலாஸ் பியூஸ்ரன் என்பவரின் தே.அ.அட்டை (881064170v) 08.09.2008 அன்று பேர்சுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறித்த முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

## தேவை

கேக் வேலையில் அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புவோரும் தேவை.
தொடர்பு:-**ஒமக்ஸ் ஹோட்டல்**
*372, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.*

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 16 . 10 . 1935



மறைவு 17 . 08 . 2008

*திதி: பிரதமை(16.09.2008)*

### அமரர் முதலித்தம்பி சின்னராசா (பூசாரி)

பிறந்தவர் இறப்பது நியதி எனினும்
குறுகிய காலத்தில் மறைந்து போனதே, உறுத்துது
எமது உள்ளங்களை, உருக்குது மனதை, நாள்தோறும்
கேட்ட அன்பான குணமும், பண்பான வார்த்தைகளும்,
பிரிந்ததை மனது பொறுக்க முடியவில்லையே.

எமது குடும்பத் தலைவரின் பிரிவுத்துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் யாவருக்கும் நன்றி செலுத்துவதுடன் இன்று (16.09.2008) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யார்வத்தை,
கோப்பாய் வடக்கு,கோப்பாய். (78492) **குடும்பத்தினர்**

## பொதுக்கூட்டமும் சமஸ்கிருத வகுப்பும்

18.09.2008 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் துவாளிப் பிள்ளையார் கோயிலடி, உடுப்பிட்டியில் அமைந்துள்ள வீட்டில் பொதுக்கூட்டமும் சமஸ்கிருத கிரியாவிளக்க வகுப்பும் ஆரம்பிக்கப்படும்.
அங்கத்தவர்களும் வகுப்பில் பங்குகொள்ள விரும்பும் சைவக்குருமார்களும் தவறாது சமூகம் தரவும்.

**க.சோமசுந்தரக் குருக்கள்**
*செயலாளர்.*
*கோப்பாய்.* *அகில இலங்கை சைவக்குருமார், அர்ச்சகர் பேரவை.*

## மனம் நிறைந்த வாழ்த்துகள்

மாகாண மற்றும் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ற போக்குவரத்து மற்றும் ஏனைய வசதிகளை ஏற்பாடு செய்து தந்த கௌரவ சமூக சேவைகள் அமைச்சர் மாண்புமிகு **கே.என்.டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கும் தேசிய மட்டத்தில் பங்குபற்ற பிரயாண அனுமதியின்றித் தவித்த எமக்கு பிரயாண அனுமதியினை ஒழுங்கமைத்து மறுநாளே பிரயாணம் செய்ய சகல உதவிகளையும் செய்து தந்த எமது மதிப்புக்குரிய *அரச அதிபர்* **திரு.K. கணேஷ்** அவர்களுக்கும் திட்டமிடல் பணிப்பாளர் **திரு.M. பிரதீபன்** அவர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

**கல்லூரிச் சமூகம்.**
**யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.**
*மானிப்பாய்.*

## சிறுவர் உரிமைக் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், செப்.16

யாழ். பிரதேச மட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டுக் குழுவின் மாதாந்தக் கூட்டம் நாளை புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ். பிரதேச செயலர் மரியதாசன் ஜேகூ தலைமையில் நடைபெறும். (1-51)

உ

## தசாஹாதி கிருஹயக்ஞ அழைப்பு

அன்புடையீர்,

*பிரம்மஸ்ரீ ஞானேஸ்வரக் குருக்கள் நாகேஸ்வரி அம்மா*
*பிரம்மஸ்ரீ ஞானேஸ்வரக் குருக்கள் மனோராஜ்*

ஆகியோர் கடந்த ஆவணி மாதம் 22ஆம் நாள் (07.09.2008) ஞாயிற்றுக்கிழமை சிவயோகசாயுத்யம் அடைந்த எனது மகள், பேரன் ஆகியோரின் ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டு பின்வரும் கிரியைகள் நடைபெறும்.

ஆவணி 31ஆம் நாள் (16.09.2008) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு-தசாகம்
புரட்டாதி 1ஆம் நாள் (17.09.2008) புதன்கிழமை காலை 9 மணிக்கு- ஏகோதிஷ்டம் மாசியம்
புரட்டாதி 2ஆம் நாள் (18.09.2008) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு- சபீண்டீகரணம்
புரட்டாதி 3ஆம் நாள் (19.09.2008) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு- கிருஹயக்ஞம்

மேற்படி ஆத்மசாந்திக் கிரியைகளிலும், பிரார்த்தனைகளிலும் தொடர்ந்து நடைபெறும் சமாராதனையிலும் தாங்களும் கலந்து ஏகுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

நாகேந்திரபீடம்,
'மயூரிவாசம்',
48, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி-நீராவியடி,
யாழ்ப்பாணம்.

வைதிக குரு
பிரம்மஸ்ரீ
**ஐ.ஞானக்குருக்கள்**
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

நா.அமிர்தாம்பிகை அம்மா,
சா.பாலசுப்பிரமணியக் குருக்கள்.
(78505)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## திருமதி
## மகேஸ்வரி சிவபுண்ணியம்பிள்ளை

[ஓய்வுபெற்ற ஆசிரியை யா/சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்]



**நீங்கள் எம்மைவிட்டு பிரிந்து மாதமொன்றாகி விட்டது**
**ஆனால் உங்களின் நினைவுகள் எம் மனதை**
**விட்டு அகலுமோ, எம் மனம் தான் ஆறிடுமோ?**

கடந்த 17.08.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், எமக்கு உற்றதுணையாக நின்று பல வழிகளிலும் உதவியோருக்கும் எமது இதயம் கலந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (16.09.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

தோற்றம்
22.11.1934

மறைவு
17.08.2008

தகவல்:
கு.தியாகராசா,
"தாயகம்",
இணுவில் மேற்கு, இணுவில். (சி-554668)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடர்கள் என்னதான் ஏற்பட்டாலும் மொழியை கலை இலக்கியத்தை மறவாத தமிழ் இனம்

## வலி.மேற்குக் கலை இலக்கிய விழா இதை எடுத்துக்காட்டியது


தமிழ்த்தாய் மங்கள வாத்திய சகிதம் ஊர்வலமாக அழைத்து வரப்படும்போது....

தமிழன், என்னதான் இடர்கள் ஏற்பட்டாலும் தன் மொழியை பாரம்பரிய கலை இலக்கியங்களை, விழுமியங்களை ஒரு போதும் மறக்கமாட்டான் என்பதற்கு உதாரணமாக, வலிகாமம் மேற்குப் பிரதேச கலை இலக்கிய விழா அமைந்திருந்தது.

மங்கள வாத்திய இசை முழங்க, பொம்மலாட்டம், கரக ஆட்டம், வேப்பிலை ஆட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், காவடியாட்டம், சிலம்பாட்டம், நெருப்புப்பந்தாட்டம் எனப் பலவகைப் பண்பாட்டு காட்சிகளுடன் விருந்தினர்கள் அனைவரும் முன்னே நடந்துவர, பின்புலத்தில் தமிழ்த்தாய் உருவம் அசைந்து வரும் காட்சி மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியது எனலாம்.

பெருந்திரளான மக்கள் புடைசூழ வலி. மேற்கு, பிரதேச செயலகத்திலிருந்து பவனி ஆரம்பமானது. வழியெங்கும் பூரண கும்பங்கள் வைத்து பூமழை தூவி, பொதுமக்கள் வரவேற்க, மெதுவாக ஊர்ந்து பவனி சங்கானை கலாசார திறந்த வெளியரங்கை அடைந்தது. வலிகாமம் மேற்கு பிரதேசகலாசாரப் பேரவையினால் கடந்த 8ஆம் திகதி நடத்தப்பட்ட கலை இலக்கிய விழாவின் ஆரம்ப நிகழ்வு இவ்வாறு ஆரம்பமானது.

இவ்விழா பிரதேச செயலர் திருமதி தே.பாபு தலைமையில் இரு அமர்வுகளாக இடம்பெற்றது. முதல் அமர்வு வழக்கம்பரை முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சு.சுந்தரராஜக் குருக்களின் ஆசியுரையுடன் ஆரம்பமானது. காலை 9.30 மணிமுதல் மதியம் 12.30 மணிவரை நடைபெற்ற இவ்வமர்வில் இசை, நாட்டியம் போன்றன இடம்பெற்று, கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் உரையுடன் நிறைவுற்றது.

இரண்டாவது அமர்வு தமிழ்தாய் பவனியுடன் பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார் பண்டிதர் தி.பொன்னம்பலவாணர். தமிழ்ப் பண்பாட்டையும் தமிழ் கலாசாரத்தையும், வளர்த்து, தமிழர்களாக நாம் வாழ வேண்டும் இதை யாவருக்கும் உணர்த்த இப்படியான கலைவிழாக்கள் வாய்ப்பாக அமைய வேண்டும் என்றார்.


அரச அதிபர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தபோது....

### கலைகளைக் காப்பாற்றுவது நம் கடமை

ஆசியுரை வழங்கிய தென் இந்திய திருச்சபை முன்னாள் பேராயர் எஸ்.ஜெபநேசன் தனதுரையில் கூறியதாவது:-

இன்று இக்கலைவிழாவை மிகச் சிறப்பாக நடத்துகிறீர்கள். அதனை நான் வாழ்த்துகிறேன். பல வகையான கலாசார விழுமியங்களின் காட்சிகளைப் பார்த்து ரசித்தேன். ஆனால் இவற்றைப் பாதுகாத்து, காப்பாற்றுவது ஒவ்வொருவரின் கடமையாகும். இவற்றைப் பேணிப் பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்கு வழங்குவது மிக மிக அவசியம். அதை இங்குள்ள தமிழ் மக்கள்தான் செய்யவேண்டும். நான் பிற நாட்டிலே எத்தனையோ தமிழ் விழாக்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் அவையெல்லாம் செயற்கைத் தன்மையாகவே காணப்பட்டன. ஏனெனில் அவர்களுக்குத் தமிழ் தெரியாது. ஆங்கிலத்திலே எழுதி அதனைப் பாடமாக்கி வந்து சொல்வார்கள். அதிலே எந்தவிதமான உணர்ச்சியுமில்லை; எந்தவிதமான அர்த்தமுமில்லை. இந்த இடத்தில் உள்ளவர்கள்தான் இவற்றைப் பேணிப் பாதுகாக்க முடியும்.

எமது தமிழ் மொழியை, கலாசாரங்களை பாதுகாத்துக் கொள்வதில் திடசங்கற்பம் எடுக்க ஒவ்வொரு தமிழ் மகனும் முன்வரவேண்டும் எனத் தெரிவித்தார்.

### இனம் அழிந்து போக அனுமதிக்கலாகாது

பிரதேச செயலரும் கலாசாரப் பேரவையின் தலைவருமாகிய திரு மதி தே.பாபு, தனதுரையில் கூறியதாவது:-

கலாசாரத்தைப் பேணாத இனம் என்றால் அந்த இனம் அழிந்து போகக்கூடிய இன மாகத் தானிருக்கும். ஓர் இனத்தினுடைய அடையாளமாகக் இந்தக் கலாசாரம் காணப்படுகிறது. இன்றைய காலத்திலே இந்தக் கலாசாரம் சீரழிந்து போகிற நிலைமையை நாங்கள் காண்கின்றோம். வெளிநாட்டு மோகம், சினிமா மோகம் என்பவற்றால் இன்று எம்முடைய கலாசார விழுமியங்கள் கூடுதலாக அழிந்து போய்க்கொண் டிருக்கின்றன. அவற்றைக் காப்பது எங்களுடைய பிரதானமான கடமையாக இருக்கின்றது. உண்மையிலேயே நாம் பல விடயங்களை இன்று மறந்து போய் இருக்கின் றோம். இந்தவகையிலே இவ்வாறான விழாக்கள் எடுப்பதன் மூலம் அவற்றை ஞாபகப்படுத்தி, இன்னும் அவற்றை நிலைப் படுத்தச் செய்கின்ற ஒரு விழாவாகத்தான் இந்த விழா அமைகின்றது.

இந்த வலிகாமம் மேற்குப் பிரதேசம் என்பது ஒரு கலையார்வம் நிறைந்த பிரதேசமாகும். இங்கு நடைபெற்ற நிகழ்வுகளைப் பார்க்கும்போது அதனை நாம் விளங்கிக்கொள்ள முடியும். பல்வேறு கலைகள் வளர்ந்த இந்தப் பிரதேசத்தை நாங்கள் கட்டிக் காக்கவேண்டியது எங்களுடைய கடமையாகும் என்றார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:-

கலாசார மண்டபத்தைச் சீராகக் கட்டி முடிக்க அரசாங்க அதிபர் மேலும் உதவி வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி தனதுரையில் கூறியதாவது; இம்மண்டபத்தின் கட்டட வேலைகள் பூர்த்தியடையவேண்டிய நிலையில் இருந்தாலும், ஒரு குறையாக அதனை எடுக்காமல், இந்த கலை விழாவை இங்கு நடத்திச் சிறப்புறச் செய்துள்ளதைப் பார்த்து பூரிக்கிறேன். இந்த மண்டபத்தைப் பூர்த்திசெய்வதற்கான முயற்சிகள் அனைவராலும் எடுக்கப்படும்; என்று நான் திடமாக நம்புகின்றேன் என்றார்.


### கல்விப்பாரம்பரியம் உண்டு

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராஜா உரையாற்றியபோது:-

இந்த யாழ்ப்பாண மண்ணிலே இன்றைய காலகட்டத்திலே, இத்தகைய ஒரு பெரிய விழாவைக் காண்கின்றபோது, நாங்கள் எங்களை மறந்த லயத்திலே இருக்கின்றோம். வலிகாமம் மேற்கு பிரதேசத்திற்கு, ஈழத்துக் கல்வி புலமைப் பாரம்பரியத்திலே ஒரு குறிப்பிட்ட முக்கியமான இடமுண்டு. இன்று எமக்குக் கிடைக்கின்ற பழந்தமிழ் இலக்கியங்களில் ஒன்று எனக் கருதப்படுகின்ற, ஒல்லாந்தர் காலத்து முந்திய இலக்கியமாகக் கருதப்படுகின்ற ஒரே ஒரு நூல், 'வட்டுக்கோட்டை, பிட்டியம்பதி பத்திரகாளி அம்மை ஊஞ்சல்' வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கணபதி ஐயர் என்பவர் எழுதிய அந்த நூலே இன்று எமக்குக் கிடைக்கின்ற ஒரு முக்கியமான

**- மு.சந்திரகுமார் -**

நூலாகும். அந்தவகையிலே வட்டுக்கோட்டைக்கு ஒரு கல்விப் பாரம்பரியம் உண்டு. வட்டுக்கோட்டையில் ஒரு கல்வியும், கல்விப் பாரம்பரியங்களும், கலை இலக்கிய முயற்சிகளும் இருந்தபடியாற்றான் அன்று மெஷனரிமார் இந்த மண்ணில் கால்பதித்தார்கள். எனவே, வட்டுக்கோட்டையில் ஒரு யாழ்ப்பாணக் கல்லூரி நிமிரவும், அதனூடு இலங்கை முழுவதும் கல்வி; கலை இலக்கியத்திற்கான பாரம்பரியம் வளரவும் இந்த வலிகாமம் மேற்கில் வட்டுக்கோட்டையில் கல்விப்புலமை பாரம்பரியப்பட்டது என்றார். ★


விழாவிற்கு வருகை தந்திருந்தவர்களில் ஒரு பகுதியினர்.

# அடுத்த வருட சாகித்திய விழா கிளிநொச்சியில் நடத்தப்படும்

## ஜனாதிபதி நம்பிக்கை

கொழும்பு,செப்.16

நாட்டில் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழிப்பதற்கான முயற்சிகளில் படையினர் துரிதமாக ஈடுபட்டுவருகின்றனர். இந் நிலையில் நாம் அடுத்த சாகித்திய விழாவை கிளிநொச்சி நகரில் நடத்துவோம் - என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

கம்புறுப்பிட்டிய உபாலி விஜேவர்த்தன மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேசிய சாகித்திய விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு,

இந்த நாட்டில் பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கான நடவடிக்கைகளை படையினர் வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றனர். அவர்களுக்கு அரசு பூரண ஒத்துழைப்பை வழங்கிவருகின்றது. மக்களும் அவர்களுக்கு ஆதரவு கொடுக்கின்றனர்.

இவ்வாறான ஒரு நிலைமையிலேயே தேசிய சாகித்திய விழா நடத்தப்படுகின்றது. தேசியத்துக்கு சாகித்திய விழா மிகவும் முக்கியமானது. நாட்டில் பயங்கரவாதம் விரைவில் ஒழிக்கப்பட்டு கௌரவமான சமாதானம் ஏற்படுத்தப்படும்.

அத்துடன், அடுத்த தேசிய சாகித்திய விழா கிளிநொச்சி நகரில் நடத்தப்படும் - என்றார். (சி)




'யுரேக்கா' ஆளுமை அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் 'மாற்றங்களும் சவால்களும்' என்னும் பொருளில் வலுவூட்டல் பயிற்சிப் பட்டறை ஒன்று 'ரில்கோ' விருந்தினர் விடுதியில் அண்மையில் நடைபெற்றது.

யுரேக்கா நிறுவனப் பணிப்பாளர்களான திருமதி மிதிலா ஸ்ரீபத்மநாதன், திருமதி ராதை பாஸ்கரன், வளவாளர் எஸ்.சந்திரசேகரன், யுரேக்கா நிறுவன மாவட்ட இணைப்பாளர் பி.கேசவன் ஆகியோரை முதலாவது படத்திலும் பயிற்சிநெறியில் கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# காலங்கடந்த பிறப்பு, இறப்பு பதிவுக்கு நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,செப்.16

கரவெட்டிப் பிரதேச செயலாளர் பிரிவில் காலங்கடந்த பிறப்பு, இறப்புகளைப் பதிவுசெய்வதற்கான நடமாடும் சேவை எதிர் வரும் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் வடபிராந்திய உதவிப்பதிவாளர் நாயகம் திருமதி ம.இராஜரட்ணம் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நடமாடும் சேவையில் உத்தேச வயதுச் சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதோர் தமது விண்ணப்பங்களைக் கரவெட்டிப் பிரதேச செயலக பதிவாளர் கிளையில் உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கேட்டுள்ளார். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.

விழாவின் பிரதம விருந்தினரான யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதை முதலாவது படத்தில் காணலாம்.

கல்லூரி அதிபர், திருமதி வேதநாயகி பேரின்பநாதன் உரையாற்றுவதை இரண்டாவது படத்தில் காணலாம்.

நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (111)


# 1ஆவது பிறந்தநாள் வாழ்த்துகள்

அச்சுவேலி தெற்கைச்
சேர்ந்த திரு-திருமதி
சர்வநேசன் - கயல்விழி
தம்பதியரின் செல்வப் புதல்வன்

திவிசன் இன்று (16.09.2008) தனது பிறந்த நாளை லண்டனில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரைச் சவுதியில் உள்ள அம்மப்பா, அச்சுவேலியிலுள்ள அம்மம்மா, சவுதியிலுள்ள மாமா, அச்சுவேலியிலுள்ள அம்மம்மாமார், பூட்டி, மாமாமார், கரவெட்டி அப்பப்பாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சகி அத்தை மாமா, லண்டனிலுள்ள லீலா அத்தை மாமா, மச்சான் ஆகியோர் அச்சுவேலியிலுள்ள உலவிக்குள பிள்ளையார் அருள் பெற்று நீடூழிகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: ரி.சறோ (அம்மம்மா).
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.





16.09.2008
திவிசன்

(77718)


# கிராமங்கள் தோறும் கலை, கலாசாரங்களை பேணிக்காக்கும் நடவடிக்கைகள் வேண்டும்

## இது காலத்தின் தேவை என்கிறார் பரு.பிரதேச செயலர்



மந்திகை, செப்.16

ஓர் இனத்தின் கலை, கலாசாரங்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்படும் போதுதான் அந்த இனம் எழுச்சி பெறும். ஒழுக்கமுள்ள, பண்பாடு மிக்க சிறந்த சமுதாயத்தைக் கட்டி எழுப்ப முடியும். தமிழ்க்கலை, கலாசாரங்கள் தனிப் பெருஞ் சிறப்புப் பொருந்தியவை. கிராமிய மக்கள் இக்கலை, கலாசாரங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இன்றைய காலத்தின் தேவைகளை நாம் மறந்து விடக் கூடாது.

மேற்கண்டவாறு பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலை மன்றத்தின் 46 ஆவது ஆண்டு கலை விழாவிலும் பரிசளிப்பு விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளரும் மன்றத் தலைவருமான கே.பி. ஆனந்தநடேசன் தலைமையில் விழா நடைபெற்றது.

புவனேஸ்வரி கலையரங்கில் நடைபெற்ற இவ்விழாவிலே பிரதேச செயலர் வரதீஸ்வரன் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

கிராமிய அபிவிருத்தி மேம்பாடு அக்கிராம மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. கிராமிய இளைஞர், யுவதிகள் துடிப்புடனும் சேவை மனப்பான்மையுடனும் செயற்பட வேண்டும். கிராமத்தில் ஒற்றுமை நிலைநாட்டப்பட வேண்டும்.

இக்கலை மன்றம் கிராமிய கலை, கலாசார, கல்வி, விளையாட்டுத்துறைகளின் வளர்ச்சிக்கு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியன. மிகவும் சிறப்பான சூழலிலே அமைந்துள்ள இக்கலை மன்றத்தின் செயற்பாடுகள் மேலும் விரிவடைந்து அக்கிராம மக்களுக்கு நன்மைகளை வழங்க வேண்டும். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இக்கலை மன்றத்தின் வளர்ச்சிக்கு பிரதேச செயலகத்தால் வழங்கப்படக் கூடிய உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

யாழ். மாவட்ட மீள் எழுச்சித் திட்டப் பணிப்பாளர் வி. விஸ்வலிங்கம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது,

இக்கலை மன்றம் பல்வேறு துறைகளிலும் முன்னணியில் திகழ்வது மிக மகிழ்ச்சிக்குரியது. முக்கியமாக சிறுவர்கள், இளைஞர், யுவதிகளின் எதிர்காலத்தை வளம்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை மிகச் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றன. இக் கலை மன்றம் இப்பிரதேசத்தில் முக்கியத்துவம் வாய்ந்த முன்னணிக் கலைமன்றமாகச் செயற்பட்டு வருவது பாராட்டுக்குரியதாகும் - என்றார்.

பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி எஸ்.சுகுணா, மன்னார் மாவட்ட நிகொட் நிறுவனத் திட்டப் பணிப்பாளர் எஸ்.இராஜரட்ணம், யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் எம்.ஸ்ரீபதி உட்பட இன்னும் பலர் உரையாற்றினர்.

பாலர் கதம்பம், பாலர் பேச்சு, மிருதங்க இசை, புல்லாங்குழல் இசை, இன்னிசை, ஓகன் இசை, ஆங்கில நாடகம், நடனம் என்பவற்றினை அடுத்து பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி ஆசிரியர் பா.இரகுவரனின் நெறியாள்கையில் ''தொ(ல்)லைக்காட்சி'' என்னும் நாடகமும் இடம்பெற்றது. (202-218)


# ஓராண்டு நினைவில் நாமிங்கு!

# எங்கள் தீபமே!



## அமரர் வாசன் தீபராஜ்

(செல்வன்)

திதி: ஆவணித் தேய்பிறைப் பிரதமை (16.09.2008)

கண்மகிழ 12.02.1996

கண்நெகிழ 29.08.2007

தீபராஜ்!
எங்கள் முற்றமதில் ஒற்றைக் கொடி
தங்கையவள் மடியதில் வந்துதித்த முதல் பூவாய்!
பாசமாய் உருவான அத்தான் வாசன்
பெயர் காக்க வந்த கனியாய்!
காலமெல்லாம் கண் குளிர எங்கள் நெஞ்சமதில்
நிழலாகி நிலைத்திருப்பாய்
என்றல்லவா எண்ணியிருந்தோம், நீயோ
நாமெண்ணியிருந்த காலமதை பொய்யாக்கி
காலனவன் பின் சென்று நிழல் படமாகிப் போனாயோ!
மாமன்மார் மூவர்க்கு ஒற்றைத் தங்கையவள்
தந்த தவப் புதல்வனல்லவா, நீ
பாசமேயுருவாகி பெருமை கொண்டோம்
ஆசை மருமகனென்று,
வேசமென எண்ணி பாதி வழி சென்றாயோ?
தனிக்கொடி தாயவள் தவித்திட ...
தூர தேசமதில் தந்தையே தனித்திட
கொடிய காலனுனைக் காவிச் சென்று
ஓராண்டு வந்ததய்யா!
பெருமைக்கோர் பேரனென கொஞ்சிய அம்மம்மா
அருமையென உனையள்ளி அணைத்த அம்மப்பா
வாஞ்சையோடு வருடி மகிழ்ந்த மாமா, மாமிமார்,
மச்சானென நெஞ்சமதில்
மகிழ்ந்திருந்த மைத்துனர்களும்
சுற்றமே உயிரான உறவுகளும் உன் வடிவிழந்து
உணர்விழந்த சோகமது ஓராண்டிலும் ஓயவில்லை
ஆண்டுகள் நூறாகிலும் ஆறிடாத எங்கள் நெஞ்சமதில்
நிலைத்து நிற்பாய் என்றும் தீபராஜ் எனும் தீப ஒளியாக!

பிரிவுத் துயரில்:
துரைராசா குடும்பம்

புத்தூர் வடக்கு, மருதடி,
சுன்னாகம்

(78142)


# யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு வகுப்பறைகள் அமைத்துத் தருமாறு அதிபர் கோரிக்கை

நல்லூர், செப்.16

யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு புதிய வகுப்பறைகள் அமைக்கப்படவேண்டியது அவசியமாகவுள்ளது. எனவே 20 வகுப்பறைகளை அமைப்பதற்கு உதவவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கல்லூரியின் அதிபர் திருமதி வேதநாயகி பேரின்பநாதன் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகத்திடம் இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

தற்போதுள்ள கட்டடத் தொகுதிகள் சேதமடைந்துள்ளதுடன், மழை காலங்களில் மாணவிகள் வகுப்பறையில் இருக்க முடியாது கஷ்டமுறுகின்றனர்.

பழைய கட்டடத் தொகுதிகளிலேயே சிரமங்களின் மத்தியில் கற்றல் செய்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது. புதிய கட்டடத் தொகுதியை அமைத்துத்தர வலயக் கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் -எனவும் கோரிக்கை விடுத்தார். (202-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசதிகள் குறைந்த நெடுந்தீவில் வாழும் குழந்தைகளுக்கு கல்வி அறிவூட்டும் கோட்டைக்காடு மங்கையர்க்கரசி வித்தியாலயம்


பாடசாலையின் முகப்புத் தோற்றம்

வளங்கள் அருகி வரட்சி ஆதிக்கம் செலுத்தும் காலகட்டத்திலும் கூட இயற்கை அன்னை மீதுள்ள நம்பிக்கையுடன் விவசாயத்தையே முக்கிய தொழிலாகக் கொண்டு வாழும் பகுதிக் குடிமக்களை ஒருங்கிணைத்து அவர்களின் குழந்தைகளுக்கு கல்வி அறிவூட்டும் நோக்குடன் உருவாக்கப்பட்டதே நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலயம்

நெடுந்தீவு மேற்கு வெடியரசன் கோட்டைக்கு அண்மையில் இது அமைந்துள்ளதால் கோட்டைக்காடு மங்கையர்க்கரசி வித்தியாலயம் என அழைக்கப்படுகிறது. இந்தப் பாடசாலை 1937ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தீவகத்தின் கல்வித்துறை குருகுலம், திண்ணைப் பள்ளிக்கூடம் என்ற நிலையில் இருந்து மிஷனறிக் கல்வி முறைக்குள் உள்




வாங்கப்பட்டபோது இந்து மதத்திற்கு ஏற்பட்ட இடையூறுகளைக் களைய இந்துமதப் பாடசாலைகளை உருவாக்கவேண்டிய கட்டாயத் தேவையின் உணர்வுகளினால் உதித்ததே இந்தப் பாடசாலை. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் செயற்பாடுகளில் இதுவும் ஒன்று. இந்தப் பாடசாலையின் முதலாவது அதிபராகக் கந்தையா கணபதிப்பிள்ளை நியமிக்கப்பட்டார்.

ஒரு சிறிய கொட்டகையில் குறைந்தளவு பிள்ளைகளுடன் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வந்த இப்பாடசாலையின் அந்தக் கொட்டகையும் 1966இல் ஏற்பட்ட கடும் புயலின் தாக்கத்திற்கு உள்ளாகி முழுமையாச் சேதமடைந்ததையடுத்து பாடசாலை தொடர்ந்து நடைபெற உதவியாக அயலில் உள்ள தனிநாயகம் என்பவர் தமது வீட்டின் ஒரு பகுதியை பாடசாலைக்கென வழங்கி ஒத்துழைத்ததாக அப்பகுதி மக்கள் கூறுகிறார்கள்.

இந்தப் பாடசாலைக்கென கட்டடம் ஒன்றை அமைக்கவேண்டும் என்பதில் அதிபர் கணபதிப்பிள்ளையும், தனிநாயகமும் எடுத்திருந்த முயற்சியால் கல்வித் திணைக்கள நிதியீட்டத்தில் 50 அடி நீளமான கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டது. எனினும் அக்கட்டடம் ஒரு திறந்த நிலையில் உள்ளதால் 1990ஆம் ஆண்டுவரை பாடசாலைக்கான அனைத்து ஆவணங்களும் தனியாரது வீட்டிலேயே பாதுகாப்பாக வைக்கப்பட்டு வந்துள்ளது. தற்போதும் கூட அதிபருக்கான அலுவலகமோ களஞ்சிய அறையோ இல்லாத நிலையில் இப்பாடசாலை இயங்கிவருகின்றது.

இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்காக இதுவரை எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் நிதி ஒதுக்கீடு செய்துதவியதாகத் தகவல்கள் இல்லை. பௌதீக வளங்களைப் பொறுத்தவரையில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் மலசலகூடத்தொகுதி ஒன்றை அமைக்க உதவியுள்ளது. கல்வித் திணைக்களம் புதிய வகுப்பறைக் கட்டத்தையும் 'யுனிசெவ்' நிறுவனம் நீர்த்தாங்கி ஒன்றையும் அமைத்துதவியுள்ளதாக தற்போதுள்ள அதிபர் பத்மநாதன் கூறினார்.

கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் புதிய மாறுதல்கள் ஏற்பட்டுள்ள இன்றைய காலகட்டத்திலும் போதிய வளங்களற்ற நிலையில் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் உரிய இலக்கை அடைவது சிரமமாகவே உள்ளது. மாணவர்கள் பயன்படுத்தும் தளபாடங்கள் 30 முதல் 36 வருடங்கள் பழைமை வாய்ந்தவையாகவே உள்ளது. புதிய சீர்த்திருத்தத்திற்கு அமைய பரிந்துரைக்கப்பட்ட தளபாடவகைகள் எதுவும் இங்கு இல்லை. ஆசிரியர்

## பாடசாலையின் பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்கு நிறுவனங்களின் உதவிகள் எதிர்பார்க்கப்படுகின்றன

களுக்கான தளபாடங்களும் பற்றாக்குறையாகவே உள்ளன.

அதிபருடன் மூன்று ஆரம்பக்கல்வி ஆசிரியைகளும் தொண்டர் ஆசிரியர் ஒருவருமாக தற்சமயம் ஐந்து ஆசிரியர்கள் கடமையில் உள்ளனர். 30 மாணவர்கள்வரை கல்வி கற்கும் இப்பாடசாலையில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 100இற்கும் மேற்


இல்ல மெய்வன்மைப் போட்டியின்போது பரிசு பெற்ற மாணவர்கள் அதிபர், ஆசிரியர்களுடன்...

பட்ட புள்ளிகளை மாணவர்கள் பெற்றிருந்தாலும் பரீட்சையில் சித்தியடைய முடியாமை துரதிஷ்டமானதே. கல்விச் செயற்பாடுகளும் வளங்களும் அதிகரிக்கப்படவேண்டும் என்பதே பெற்றோர்களின் ஆதங்கம். எனினும் வலய மட்டத்தில் இடம்பெறும் போட்டிகளில் மாணவர்கள் சிறப்பிடங்களைப் பெற்றுவருவது மகிழ்ச்சியளிக்கிறது. 2002இல் இருந்து வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகளும் நடைபெற்று வருகின்றன.

பாடசாலைக்கென விளையாட்டு மைதானத்தை அமைக்க வசதியாக இப்பகுதியில் உள்ள சிலர் தமது காணிகளை வழங்கியுள்ளனர். பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கமும் விளையாட்டு மைதானத்தைச் செப்பனிட்டு உதவியுள்ளன.

தற்சமயம் பழைய மாணவரான அறிவரசனின் உதவியுடன் மின்இணைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. எனினும் ஒரு வானொலி மட்டுமே இங்கு இருக்கிறது. தொலைக்காட்சி ஒன்றை வழங்குவதன் மூலம் உலக நடப்புகளை இந்தப் பிரதேசத்து மாணவர்களும் அறிந்துகொள்ளக்கூடிய வாய்ப்புகள் ஏற்படுத்தப்படவேண்டும். உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன்மாணவர்களுக்குஉணவு வழங்கும் நடவடிக்கை இடம்பெறுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களும், தொண்டு நிறுவனங்களும், பழைய மாணவர்களும் பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவமுன் வரவேண்டும். பின்தங்கிய பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை செலுத்துவதன் மூலம் தமது பிரதேசத்துக் கல்வி நிலையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த உரியவர்களும் கல்வித் திணைக்களமும் இந்தப் பாடசாலைக்குரிய வளங்களை ஏற்படுத்திக்கொடுக்க முன்வரவேண்டும் என்பதே கோட்டைக்காட்டு மக்களின் கோரிக்கையாக உள்ளது.

நம்பி

# சமகாலக் கல்விச் செயற்பாடுகளில் புதிய போக்காகவும் முதன்மைக் காரணியாகவும் விளங்கும் நடைமுறைப்படுத்துகை



கல்வியே ஒரு நாட்டு அபிவிருத்தியின் கருவி என்ற நிலையில் முதன்மை பெறுகின்றது. தேசத்தைக் கட்டி எழுப்பி நாட்டு மேம்பாட்டிற்கான அடிப்படைகளைக் கல்வியே கொண்டுள்ளது. கல்வித் துறையிலும் வேறு எந்தத் துறையிலும் நடைமுறைப்படுத்துதலே தற்போதைய புதிய போக்காகவும் முதன்மைக் காரணியாகவும் உள்ளது. சமகால யதார்த்த நிலைமைகள், போக்குகள் என்பற்றிற்கு ஏற்ப கல்வித்துறை மாற்றங்களை, தேவைகளை

## பலத்தை விருத்தியாக்க பலவீனங்களை நீக்க சுயமதிப்பீட்டுச் செயற்பாடுகள் அவசியம்

அறிந்து செயற்படுதலே நடைமுறைப்படுத்தலின் அடிப்படையாகும். எல்லாத்துறைகளிலும் நடைமுறைப்படுத்துதல் இல்லையேல் பின்னடைவுகளே ஏற்படும்.

எமது பிரதேசங்களில் கல்வியை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான செயலாற்றுகைகள் போதுமானவையாக இல்லை. சமகாலைக் கல்வியை நடைமுறைப்படுத்துதலினூடாக சர்வதேச கல்வி நிறுவகம் பின்வரும் பிரவேசங்களை எடுத்தியம்புகின்றது.

✱ கல்வி கிடைக்கக்கூடிய வளங்களையும் அமைப்புகளையும் விரிவாக்கி கலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

✱ கட்டாயக்கல்வி, கல்வியில் சமவாய்ப்பு, சம கணிப்பு ஊடாக சர்வதேச நிலைகளுடன் பொருந்துதல்.

✱ அறிவின் உன்னதங்களை (Excellence) நோக்கி ஒவ்வொருவரையும் திசைமுகப்படுத்தலும் தொழிலுக்கான வழிகாட்டல்களும்.

✱ பாடசாலை ஆசிரியர், ஆளணியினருக்கான வாண்மை விருத்தி முகாமைத்துவ ஆற்றல்களைப் பெருக்குதல். தொழில்நுட்ப ஆற்றல்களை விருத்தியாக்கல்.

✱ மாணவர் கற்றலுக்கான தர உள்ளீடுகள், பண்புசார் விருத்திச் செயன்முறைகளை உயர்த்துதல்.

✱ வகுப்பறைக்கு வெளியிலான கல்விச் சுற்றுலா, களவேலைகள், சமூக நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுதல், சமூக சேவை, பாடசாலைத் தோட்டம், இணைபாடவிதானச் செயற்பாடுகள், செயற்றிட்டங்களில் எல்லா மாணவர்களையும் ஈடுபடுத்துதல்.

✱ கல்வி முகாமைத்துவ அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு வழிகாட்டல், ஆலோசனைச் சேவையை அறிமுகம் செய்தல், அனர்த்த முகாமைத்துவ, சுகாதார விழிப்புணர்வூட்டல்.

இவ்வாறு கல்வியை முறைப்படுத்துதலின் ஊடாக ஒவ்வொருவரும் தமது பண்புசார் தன்மையை உறுதிப்படுத்தி தமது பலம், பலவீனங்களை அறிந்து பலத்தை மேலும், விருத்தியாக்க, பலவீனங்களை நீக்க, சுயமதிப்பீட்டுச் செயற்பாடுகளை விருத்தியாக்கிக் கொள்ளவேண்டும். இதற்கு மனிதவள முகாமைத்துவத்தில் "SOWT" பகுப்பாய்வு துணை செய்கின்றது.

### SOWT பகுப்பாய்வு

எல்லா நிறுவனங்களும், தனியாள்களும் தமது பலம் (Strength), பலவீனம் (Weakness), சந்தர்ப்பங்கள் (Opportunity), சவால்கள் (Threats) என்பவற்றைக் கணிப்பீடு செய்து அபிவிருத்தியை அடைய இப்பகுப்பாய்வு உதவுகின்றது.

உள்ளகக் காரணிகள்

| சாதகமான காரணிகள் | | | சாதகமற்ற காரணிகள் |
|---|---|---|---|
| | S | W | |
| | O | T | |

வெளியகக் காரணிகள்

கல்வி முறைமையிலும் பண்புசார் தர விருத்தியை உறுதிப்படுத்திக் கொள்ள ஒவ்வொருவரும் தம்பலம், பலவீனங்களை அறிந்துகொள்ளவேண்டும். பலத்தை மேலும் விருத்தி செய்யவும், பலவீனங்களை நீக்கவும் முறையான சுயமதிப்பீட்டு செயற்பாடுகளைத் தனியாள்களும், நிறுவனங்களும், பாடசாலைகளும் மேற்கொள்ள வேண்டும். தற்போது கல்வியமைச்சில் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகு இதற்காக நிறுவப்பட்டுள்ளது.

### பண்புத்தர விருத்தி

இன்று இலங்கையின் கல்வியை நடைமுறைப்படுத்துகை செயலாற்றுகையில் பண்புத்தர விருத்தியே முதன்மைக் காரணியாக நோக்கப்படுகின்றது. இதுவரையும் பரீட்சை முறையை இலக்காகக் கொண்ட கல்வி முறைமையைப் பின்பற்றிச் சென்றதனால் சமநிலை அற்ற கல்வியும், பரீட்சைகளில் மனிதத்துவ தேர்ச்சி விருத்தியைக் கருதாது அறிவை மட்டும் அளவிடுவதனாலும், திறமைசாலிகள் எனப்படுபவர் மீது மாத்திரம் அதிக கவனம் செலுத்தப்பட்டது. இதனால் ஏனைய அதிகமானோர் கவனிக்கப்படாமல் விடப்பட்டனர். போட்டித் தன்மைகளும் சமூக ஏற்றத் தாழ்வுகளும் வர்க்க ஒடுக்கு முறைகளும் மீண்டும் உயரும் நிலை ஏற்பட்டது. இதனால் ஒழுக்கச் சீர்கேடுகள் உலகிலேயே தற்கொலை செய்வோர் அதிகமாக உள்ள நாடாக இலங்கை ஆனது. வன்முறைக் கலாசாரம் பெருகியது. சமூக உறவு நிலைகள் சீரழிந்து உலகில் தோல்வியடையும் நாடுகள் பட்டியலிலும் இலங்கை இடம் பெற்றுள்ளது.



கல்வித் துறையானது ஒருவகை பண்ட உற்பத்தித் துறையல்ல இங்கு உள்ளீடு, வெளியீடு என்பன தொடர்பில் மனித உயிர்களோடு தொடர்புடையதாக அமைகின்றது. கல்வியின் இலக்கு பூரணமான நாட்டிற்கு ஏற்ற நற்பிரஜைகளை உருவாக்குவதாகும் எனவே பாடசாலையானது நீதியின் பிறப்பிடமாகவும் ஒழுக்கம், விழுமியங்களின் உறைவிடமாகவும் மனிதத்துவத்தை நிலைநாட்டுகின்ற மையமாகவும் விளங்கவேண்டும். இதற்கு ஏற்பவே தற்போது பாடத்திட்டத்தில் பல புதிய விடயங்கள் இற்றைப்படுத்தலினூடாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. '5E' முறையில் கட்டாயமாகக் குழுவாகக் கற்கும் முறைகள், களவேலைகள், கல்விச்சுற்றுலாக்கள் இணைபாடவிதானத்திற்கு முன்னுரிமை, வகுப்பறைக்கு வெளியிலும் நூலகத்திலும் கூடுதலாகக் கற்றல் என்பவற்றினூடாகக் கற்கும் பண்புசார் விடயங்களே கணிப்பீடுகளிலும் பரீட்சைகளிலும் முக்கியமானவையாக வர இருக்கின்றன பாரம்பரிய பரீட்சை வினாத்தாள்கள் அமைப்பு இனி நீக்கப்பட்டுவிடும். இதற்கு ஏற்ப மாணவர்களைத் தயார்படுத்த ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் பண்புத்தர முகாமைத்துவ செயலார் வகைகள் கல்வி அமைச்சினூடாக தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதில்


பா.தனபாலன்,
உபபீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

முகாமைத்துவ ரீதியில் ஜப்பானிய அபிவிருத்தி மாதிரியான '5S' நடைமுறைப்படுத்தலுடன் அதன் தர அபிவிருத்திச் செயலாற்றுகையான தரவட்டங்களை (Quality Circles) நடைமுறைப்படுத்தல் செய்முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்வு, போஷாக்கின்மை காரணமாக அதிகளவானோருக்கு சுவாசத் தொற்றுநோய்

இடம்பெயர்வுகள் தொடர்கதையாகிப் போன கிளிநொச்சி மாவட்டத்தில் மனிதாபிமான நெருக்கடிகள் தவிர்க்க முடியாத வையாகிவிட்டன. இந் நிலையில் மட்டுப் படுத்தப்பட்ட வளங்களுடனும் 20 வைத்தியர்களுடனும் மக்களுக்கான பணி களைக் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை முன்னெடுத்து வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்ட மக்களின் சுகா தாரப் பிரச்சினைகளுக்கான தீர்வினை வழங்கும் இந்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரும் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாள ருமான வைத்திய கலாநிதி தங்கமுத்து சத்தியமூர்த்திவழங் கிய செவ்வி இது



கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி தங்கமுத்து சத்தியமூர்த்தி

**கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையைப் பொறுத்தளவில் தற்போது பெரும் பாலும் எவ்வகை யான நோயாளர் கள் அதிகளவான சிகிச்சைக்கு உள் ளாகின்றார்கள்?**

இடம்பெயர்வு காரணமாகவும் போஷாக் கின்மை காரணமாகவும் அதிகளவானோர் சுவாசத் தொற்றுநோய்க்காகச் சிகிச்சைபெற வருகின்றார்கள். நீண்ட கால நோய்களான சலரோகம், உயர் குருதி அமுக்கம் போன்ற வற்றிற்கும் சிகிச்சை பெறுகின்றார்கள். அதைவிடப் பொரும்பாலான மக்கள் இடம்பெயர்வு காரணமாகவும் போர் அழுத் தம் காரணமாகவும் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டு இருப்பதனால் அதற்குப் பலர் சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசா லையை நாடி வருகின்றனர்.

**சுவாசம் சம்பந்தமான நோய்க்கும் இடம்பெயர்விற்கும் எவ்வாறான சம்பந் தம் இருக்கிறது?**

இடம்பெயர்ந்த மக்கள் தமக்குப் பொருத் தமான சூழலில் குடியேறாததன் காரணமா கவும் பல்வேறு வீதிகள் செப்பனிடாத நிலையில் காணப்படுவதனாலும் அந்த வீதிகளுக்கு அருகாமையில் தற்காலிக இருப்பிடங்களில் இருப்பதனாலும் தூசு காரணமாக அவர்களுக்கு அதிகளவிலான சுவாசத் தொகுதிநோய்கள் ஏற்பட அதிக ளவில் வாய்ப்பிருக்கிறது.

**சுத்தமான குடிநீர் பருகாமையினால் அவர்களுக்கு நோய் தொற்றக்கூடிய வாய்ப்பு இருக்கின்றதா? சுவாசம் சம்பந்த மான நோய்களுடன் ஒப்பிடும்போது எவ் வாறு காணப்படுகிறது?**

சுவாசம் தொடர்பிலான நோய்களுடன் ஒப்பிடும்போது மாசற்ற குடிநீரால் ஏற் படும் நோய்களின் தாக்கம் குறைவாகவே காணப்படுகிறது.

இடம்பெயர்ந்த பிரதேசங்களில் கிணறு கள் காணப்படுகின்றன. அத்தோடு அர சாங்க அதிபர் ஊடாகவும் ஏனைய சர் வதேச நிறுவனங்களின் ஊடாகவும் பௌ சர் மூலம் நீர் விநியோகம் செய்யப்படு கின்றது. அங்கிருக்கின்ற கிணறுகளுக்குச் சுகாதார உத்தியோகத்தர்கள் குளோரினி டல் செயற்பாட்டைத் தொடர்ச்சியாகச் செய்வதன் காரணமாகக் குடிநீரைப் பொறுத் தவரை ஓரளவு பாதுகாப்பான நிலைமை காணப்படுகின்றது எனலாம்.

**இடம்பெயர்வின்போது மக்கள் எவ்வா றான வழிமுறைகளைப் பின்பற்றினால் சிறப்பாக இருக்கும் என்று நீங்கள் கருது கிறீர்கள்?**

நோய்களைத் தவிர்ப்பதற்கு அவர்கள் தங்குவதற்குப் பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்ய வேண்டும். அவர்கள் குடிய மரும் இடங்கள் பொருத்தமற்றவையாகக் காணப்படுகின்றன.

வீதியின் இரு மருங்கிலும் குடியமர்வ தால் அதிகளவிலான தூசு ஏற்பட வாய்ப் புண்டு. அவர்களுக்கு நன்னீர் வசதி போதி யளவு கிடை காமல் இருக்கின்றது. நீர் பற்றாக்குறையான இடங்களில் குடியமர்வ தால் தூசியினை அகற்ற முடியாமல் தொற்று நோய்கள் ஏற்படும் வாய்ப்பிருக்கும்.

**இடம்பெயர்ந்த மக்கள் தமக்குப் பொருத்தமான சூழலில் குடியேறாததன் காரணமாகவும் பல்வேறு வீதிகள் செப்பனிடாத நிலையில் காணப்படுவதனாலும் அந்த வீதிகளுக்கு அருகாமையில் தற்காலிக இருப்பிடங்களில் இருப்பதனாலும் தூசு காரணமாக அவர்களுக்கு அதிகளவிலான சுவாசத் தொற்றுநோய்கள் ஏற்பட அதிகளவில் வாய்பிருக்கிறது.**

**இவ்வாறான பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங் கப்பட்டுள்ளனவா? அல்லது அதனை எவ்வாறு வழங்க முடியும்?**

சுகாதார உத்தியோகத்தர்கள் ஊடாகச் சில நிறுவனங்கள் சுகாதாரக் கல்வியினை இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு வழங்கி வருகின்றனர்.

மேலும் சுகாதாரத்தைக் கடைப்பிடிக் கும்படி அவர்களுக்குத் துண்டுப் பிரசுரங் கள் மூலம் அறிவூட்டல்களைச் செய்தும் வருகின்றனர். இதன் மூலம் மக்கள் நோய்த் தாக்கங்களிலிருந்து ஓரளவு விடுபடலாம் என நம்புகின்றேன். ✱

*நன்றி: மீண்டும் வாழ்வோம்.(Inter News)*

# சமுர்த்தி புலமைப் பரிசிலுக்கு இருபது மாணவர்கள் தெரிவு

கரவெட்டி,செப்.16

கரவெட்டிப் பிரதேச செயலக சமுர்த்தி 'சிபதொற' கல்விப் புலமைப்பரிசிலுக்கு இவ்வருடம் 20 மாணவர்கள் தெரிவு செய் யப்பட்டுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்டவர்களின்விவரங்கள் வருமாறு:

இரட்ணசிறி அனுஷா (விக்னேஸ் வராக் கல்லூரி), நவரத்தினராஜா ஆரூரன் (விக்னேஸ்வராக் கல்லூரி), துஜீந்தா நவரத் தினராசா (விக்னேஸ்வராக் கல்லூரி), பிரி யங்கா வைத்தியநாதன் (விக்னேஸ்வராக் கல்லூரி), பிரசாந்தினி அழகரட்ணம் (நெல் லியடி மத்திய மகா வித்தியாலயம்), சத்திய மூர்த்தி சோபிதா (நெல்லியடி பெண்கள் உயர்தரப் பாடசாலை), செல்வரத்தினம் சக் தியா (நெல்லியடி மத்திய மகா வித்தியா லயம்), வேலாயுதம் அனிதா (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), சிவராசசிங் கம் சிவசங்கர் (நெல்லியடி மத்திய மகா வித் தியாலயம்), சர்வேஸ்வரன் சர்வானந்தன் (ஹாட்லிக் கல்லூரி),

தேனுஜா சிவபாலசுப்பிரமணியம் (உடுப் பிட்டி மகளிர் கல்லூரி), மீதுலா பற்குண ராசா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), லேனகா துரைராசா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), தெய்வேந்திரன் சர்வேந்திரா (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), ஜெயதாஸ் [illegible]ரன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் [illegible]லூரி), தம்பிராசா வைஷ்ணவன் (தேவ ரையாளி இந்துக் கல்லூரி), நளினா நற் குணம் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), கவிப்பிரியா சிவபாலன் (நெல் லியடி மத்திய மகா வித்தியாலயம்), அபர்ணா கிருஷ்ணானந்தசெல்வம் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), நாகராசா ஜெயக்குமார் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்). (202-70)

## அரச சமாதான பணிப்பாளரால் ஜனாதிபதிக்குத் தர்மசங்கடம்!

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் -கி-மூனை விமர்சித்து அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ராஜீவ விஜயசிங்க தெரிவித்திருந்த கருத்துகள் அவரது சொந்தக் கருத்துக்களே என்றும் - அதற்கும் அரசுக்கும் தொடர்பில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

இதனை ஐ.நாவுக்குத் தெளிவுபடுத் துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் தூதரிடம் கோரியுள்ளார்.

பேராசிரியர் ராஜீவ விஜயசிங்கவை எதிர்காலத்தில் அறிக்கைகளை விடுவதைத் தவிர்க்குமாறும், நாவடக்கம் பேணுமாறும் கோரியுள்ள ஜனாதிபதி, சமாதான செயல கப் பணிப்பாளரின் அறிக்கையை அரசு சகல இணைய த[illegible] மாறும் கோரியுள்ளார். (இ)

# வங்கிகள், காப்புறுதி நிறுவனங்களில் இடம்பெற்ற நிகழ்வுகள்



சுன்னாகம் தபால் கந்தோர் அலுவலகத்திற்கான கணனி வாங்குவதற்கு ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளையினர் 25 ஆயிரம் ரூபா நிதி வழங்கி யுள்ளனர்.

ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்ப்பாணப் பிராந்திய பொது முகாமையாளர் (வலயம் 1) திருமதி கிருஷாந்தி தம்பையா சுன்னாகம் அபிவிருத்திச் சங்க உறுப்பினர் அ.தற்பரானந்தனிடம் நிதியை வழங்குகின்றார்.

அருகில் யாழ்.பிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.ஜெயராஜசிங்கம், சுன் னாகம் கிளை முகாமையாளர் சி.சுந்தரேசன் மற்றும் வங்கி அலுவலர்கள், அபிவிருத் திச் சங்க உறுப்பினர்களும் காணப்படுகின்றனர். (படம்:நேசன்)

இலங்கை வங்கி திருநெல்வேலிக் கிளையின் 6 ஆவது ஆண்டு நிறைவுவிழா அண்மையில் நடை பெற்றது.

நிகழ்வில் வாடிக் கையாளர் ஒருவருக் குக் கொக்குவில் கிழக்கு (ஜே/122) மாதர் சங் கத் தலைவி திருமதி எம்.சுகந்தினி 50 ஆயிரம் ரூபா கடன் தொகையை வழங்கு கின்றார். கிளைமுகா மையாளர் இ.பிரேம ராஜனும் படத்தில் உள்ளார்.





செலிங்கோ ஆயுள் காப் புறுதி நிறுவனத்தின் வாடிக் கையாளரான கம்பர்மலை யைச் சேர்ந்த நோயுண்டுமரண மான கதிர்ப்பிள்ளை பாலேந் திரனின் இழப்பீட்டுத்தொகை யாக 3 லட்சத்து ஒன்பதாயி ரம் ரூபா வழங்கப்பட்டது.

நிறுவனத்தின் நெல்லிய டிக் கிளை முகாமையாளர் ரி.நிரோஜன் மரணமான வரின் மனைவி ரஞ்சிதமலரி டம் காப்புறுதித் தொகைக் கான காசோலையை வழங்கு கின்றார். அருகில் விற்பனை நிறைவேற்று அதிகாரி வி.பாஸ் கரனும் நிற்கின்றார்.



சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கியில் இடம்பெற்ற குதூகலச் சேமிப்பு ஆரம்ப நிகழ்வில் எடுக்கப்பட்ட படம்.

சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் க.சூரியசேகரம் முதல் வைப்புத் தொகையினை வழங்குகின்றார். அருகில் கிளை முகாமையாளர் சி.தனீஸ்வரனும் வங்கி உத்தி யோகத் தர்களும் காணப்படுகின்றனர். (படம்: தென்னவன்)



ஆயுள் காப்புறுதிக் கூட்டுத்தாபனத் தின் (இலங்கை) வாடிக்கையாளர் அ.சற்குண ராசா மரணமானதை அடுத்து இயற்கை மரணக் கொடுப்பனவாக 2 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. காசோலையை மரணமானவரின் மனைவி திருமதி ச.சித்திராவிடம் யாழ். கிளை முகாமை யாளர் வி.வி.சர்மா வழங்குகின்றார். அருகில் யாழ்.கிளை சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்களான [illegible]ராஜா, பாஸ்கரன், காப்புறுதி ஆலோசகர் செல்வி ஜீன் சிந்துஜா ஆகியோரும் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தலைநகரிலிருந்து தமிழர்களை விரட்டியடிக்க இப்படிச் சதி!

நீதிமன்றம் எதைச் சொன்னாலும் எமக்குக் கவலையில்லை. நாம் நினைத்ததைத்தான் செய்வோம் என்ற தொனியில் கருத்துகளைப் பிரதிபலிக்கின்றது இலங்கைப் பாதுகாப்புத் தரப்பு.

அதுவும் இலங்கையின் உச்ச - அதிஉயர் - நீதிமன்றக் கட்டமைப்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புகளையும், முடிவுகளையும் உதாசீனப்படுத்தி, புறந்தள்ளும் பாதுகாப்புத் தரப்பின் செயற்பாடு இலங்கைத் தீவின் எதிர்காலம் குறித்துப் பல்வேறு சந்தேகங்களையும் நிச்சயமற்ற நிலையையும் இயல்பாகவே கிளப்பியிருக்கின்றது.

வீதிகளுக்குக் குறுக்காகக் காவலரண்கள், சோதனைச் சாவடிகள் போன்றவை அமைப்பதற்கு எதிராக உயர்நீதிமன்றம் விதித்த உத்தரவு என்னவாயிற்று என்று மக்கள் தலையைப் பிய்த்துக்கொள்கின்றார்கள்.

உயர்நீதிமன்றின் தீர்ப்புக்கு மாறாக ஒரு செயற்பாட்டை மேற்கொள்வதாயின் குறைந்த பட்சம் உயர்நீதிமன்றத்திடம் ஒரு மீளாய்வு மனுவைச் சமர்ப்பித்து அதன்மூலம் மன்றின் அனுமதியைப் பெற்றிருக்கவேண்டும். ஆனால் அது எதுவும் நடைபெறாமலேயே, வீதியோரக் காவலரண், சோதனைச் சாவடி போன்றவை அமைப்பது தொடர்பான நீதிமன்ற உத்தரவு கிடப்பில் போடப்பட்டது போன்ற விதத்தில் இங்கு விடயங்கள் நடந்தேறுகின்றன.

வடக்கு, கிழக்கில் இருந்து தலைநகர் கொழும்புக்கு வந்து தங்கியிருப்போரைப் பலவந்தமாகக் கொழும்பிலிருந்து அகற்றுவதற்குப் பாதுகாப்புத் தரப்பு மேற்கொண்ட அத்துமீறல் நடவடிக்கையை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பாக அங்கு அரசுத் தரப்பு அளித்த வாக்குறுதியில் இனிமேல் அவ்வாறு தமிழர்கள் பலாத்காரமாக வெளியேற்றப்படமாட்டார்கள் என்று கூறப்பட்டு, அது நீதிமன்ற ஆவணங்களிலும் பதிவு செய்யப்பட்டது.

அதேபோல, கொழும்பிலும், சுற்றுப்புறங்களிலும் தமிழர்கள் வகைதொகையின்றிக் கைதுசெய்யப்படுவதற்கு எதிராக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தாக்கல் செய்திருக்கும் அடிப்படை உரிமை மீறல் மனுவைப் பரிசீலித்த உயர்நீதிமன்றம் வடக்கு,கிழக்குத் தமிழர்கள் தலைநகருக்கு வருவதற்கு இடையூறுகள், தொல்லைகள் விளைவிக்கக் கூடாது என இடைக்கால உத்தரவு ஒன்றை இலங்கைப் பாதுகாப்புத் தரப்புக்கு தெட்டத் தெளிவாக விடுத்திருக்கிறது என்பதும் தெரிந்ததே.

இந்த உத்தரவுகள் இருக்கத்தக்கனவாகவே, அவற்றை மீறி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பது முதல் விடயம்.

அடுத்தது - அவ்வாறு உயர்நீதிமன்ற உத்தரவுகளை மதிக்காமல் அவற்றுக்கு மாறாகச் செயற்படுவது மட்டுமன்றி, அந்த உத்தரவுகளுக்கு முரணான கருத்தைப் பகிரங்கமாக - அதுவும் உயர் அதிகாரியான ஓர் அரச ஊழியர் - வெளியிடுவது அதிலும்விட சிக்கலான விவகாரமாகும்.

"வெளி மாவட்டங்களில் இருந்து வந்து கொழும்பில் தங்கியிருப்பவர்களால் பெரும் பாதுகாப்புப் பிரச்சினை தோன்றியுள்ளது. அதனால் தக்க காரணமின்றித் தலைநகரில் தங்குவோர் வெளியேறவேண்டும். இல்லையேல் அவர்களைப் பலவந்தமாக வெளியேற்ற வேண்டிய நிலை ஏற்படும்." - இப்படி அரச உயரதிகாரியான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ விடுத்திருக்கும் அறிவிப்பு உயர்நீதிமன்ற உத்தரவை உதாசீனம் செய்யும் மிக மோசமான நடவடிக்கையாகக் கருதத்தக்கதாகும்.

தமிழர் தாயகத்தின்மீது கொடூரப் போரைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் இலங்கைப் பாதுகாப்புத் தரப்பு, அந்தக் கொடூரங்களுக்கும், குரூரங்களுக்கும் அஞ்சி, பாதுகாப்புத் தேடி, கொழும்பில் வந்து வடக்குக் கிழக்குத் தமிழர்கள் தஞ்சம் புகுந்தால், அவர்களை மிக இலகுவாக 'தக்க காரணங்களின்றி கொழும்பில் தங்குவோர்' என்று தம்பாட்டிலேயே அடையாளப்படுத்தி, 'சீல்' குத்தி, மீண்டும் யுத்தப் பிரதேசங்களுக்கு விரட்டியடிக்க எண்ணுகின்றது.

தமிழர் தாயகத்தில் பல்லாயிரம் ஏக்கர் குடிசனப் பிரதேசத்தை உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமித்து, கபளீகரம் செய்து அந்த மண்ணின் மைந்தர்களை அங்கிருந்து விரட்டியடித்துவிட்டு, அந்தப் பிரதேசத்தை அடாவடித்தனமாக அபகரித்து நிற்கும் கொழும்பின் பாதுகாப்புத் தரப்பு, சட்டத்தை மீறாமல் கொழும்பிற்கு வந்து தங்கியிருக்கும் தமிழர்களை அங்கிருந்தும் விரட்டுவதற்கு எந்தத் தார்மீகத் தகுதியும் கொண்டதல்ல என்பதே தமிழர்களின் ஏகோபித்த கருத்தாகும்.

தமது சொந்த விருப்பின் பேரில் நாட்டில் எப்பிரதேசத்திலும் வசிப்பதற்கு ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமை உண்டு. அரசமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகளுள் இதுவும் பிரதானமானதாகும். அதையே மறுக்கவும் - பறிக்கவும் - முயல்கின்றார் பாதுகாப்புச் செயலாளர்.

நாட்டில் தமது மனதுக்கு இசைந்த ஓரிடத்தில் வாழ்வதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. அப்படி ஓரிடத்தைத் தேர்வு செய்வதற்காக அவர் தகுந்த காரணத்தைப் பாதுகாப்புத் தரப்புக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று கூறுவதும் - எதிர்பார்ப்பதும் - பெரும் அபத்தமாகும்.

மாறாக, அத்தகைய இடத்தைத் தேரந்தெடுத்து வசிக்கும் ஒருவரை அங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றத் திட்டமிடும் பாதுகாப்புத் தரப்புத்தான் - அரசுதான் - தனது அத்தகைய நடவடிக்கைக்கு நீதியான, நியாயமான, ஏற்றுக்கொள்ளத்தக்க, தகுந்த காரணத்தைக் காட்டவேண்டும். அதுதான் நீதி.

தென்னிலங்கையிலிருந்து சிங்களவர்களை அழைத்துச் சென்று கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்களை அரசும் அரசுப்படைகளும், அரச அதிகாரிகளும் தாராளமாகத் தொடர்ந்தும் முன்னெடுக்கலாம் என்றால் -வடக்கு, கிழக்கு யுத்தப் பிரதேசசங்களில் இருந்து உயிருக்கு அஞ்சி ஓடிவரும் தமிழர்கள் மட்டும் ஏன் தலை நகரில் தங்கக்கூடாது?

தமிழர்களைத் தலைநகரில் இருந்து விரட்டியடிக்கும் விதத்திலான இந்த அதிகாரச் செருக்கிற்குப் பின்னால் புதைந்து கிடக்கும் பேரினவாதத் திமிரை சர்வதேசம் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

# யாழ்ப்பாணத்தில் யுத்த சூழலினால் தடைப்பட்டுப்போன புத்தாக்கச் செயற்பாடுகள் மீண்டும் புத்துயிரூட்டப்படும்

## இலங்கை புத்தாக்குனர் ஆணைய செயற்றிட்ட அதிகாரி தகவல்



1994 இல் ஆரம்பிக்கப்பட்ட புத்தாக்க புலமைச் சொத்து ஆணையம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் புத்தாக்க செயற்பாடுகளில் காலச் சூழல் காரணமாக ஈடுபடமுடியாமல் போனது. எனினும் 2002 இல் அன்றைய அரசுக்கும் விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை அடுத்து வடக்கு கிழக்கில் புத்தாக்கம் குறித்து செயற்பாடுகளை அமுல் நடத்தியது என இலங்கை புத்தாக்குனர் ஆணைய செயற்றிட்ட அதிகாரி பி.எம். சோமசிங்க செய்தியாளர் மாநாட்டில் கூறினார்.

புத்தாக்க ஆணையம் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள யாழ். மாவட்ட புத்தாக்க கண்காட்சியை முன்னிட்டு யாழ்.வேம்படி மகளிர் கல் லூரியில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே செயற்றிட்ட அதிகாரி சோமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புத்தாக்க செயற்பாடுகள் கல்வித் திணைக்களத்தோடு இணைந்து செயற்படுத்த வேண்டும் என்பதை எமது ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார். 2002 இற்குப் பின் யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் இத்திட்டங்களைச் செயற் படுத்துவதற்கான பட்டறைகளை ஆரம்பித்து நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் 2003 இல் கண்காட்சியும் நடத்தப்பட்டது. கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவித்து அவற்றை சந்தைப் படுத்தவும் பாடசாலை மட்டத்தில் இது தொடர்பான நல்ல அறிவுறுத்தல்களையும் வளர்த்தெடுப்புக்களையும் முன்னெடுக்கவும் எமது செயற்றிட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. சிறந்த புத்தாக்கக் கண்டுபிடிப்பாளர்கள் வரிசையில் யாழ்.மாவட்டத்தில் இருந்தும் மன்னார் மாவட்டத்தில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட இரண்டு மாணவர்கள் யப்பானுக்கு சென்று வர அனுப்பியிருந்தோம். இம்முறை தெரிவான 13 மாணவர்களையும் கொழும்பில் சந்தித்தபோது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. வடக்கு தெற்கு என்ற பேதங்களின்றி எல்லோரையும் எமது மாணவர்களாகக் கருதி திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றோம். இன்று இடம்பெறவுள்ள கண்காட்சியிலும் தெரிவாகும் மாணவர்கள் சர்வதேச மட்டத்தில் நடைபெறும் கண்காட்சிக்கும் செல்ல வேண்டும் என்பதே எமது விருப்பம் – என்றார்.



கொழும்பு போமிரிய பாடசாலை புத்தாக்க கழக ஆசிரியர் ஜெகன்தன சமன்குமார தெரிவிக்கையில்:-

பாடசாலை மட்டத்தில் மாணவர்களின் புத்தாக்க அறிவு மேம்பட்டு எமது தேவைகள் அறிந்து புதிய புதிய கண்டு பிடிப் புக்கள் மூலம் அவற்றை நிறைவு செய்யக்கூடியதான ஆற்றல்களை வளர்த்தெடுக்க வேண்டும். திறமைமிக்க மாணவர்களுக்கு அதை வெளிக்கொணரும் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். எமது பாடசாலையில் மாணவரால் உருவாக்கப்பட்ட புத்தாக்கங்கள் இன்று சந்தைப்படுத்தப் பட்டுள்ளது. இல்லப்போட்டிகள் போன்று புத்தாக் கப் போட்டிகளையும் நடத்துகின்றோம். புத்தாக்கப்போட்டிகளில் வலய மட்டத்தில் தெரிவானவர்கள் மாகாண, தேசிய மட்டங்களில் கலந்து கொள்ளக்கூடியதாக அவர்களைத் தயார்படுத்தவேண்டும். வேலை வாய்ப்புக்கள் இல்லை என்ற நிலையைத் தவிர்த்து எதிர் காலத்தில் வேலை இல்லாப் பிரச் சினையை தவிர்க்க மாணவர்களின் செயற்பாடுகளுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். 2009 இல் யாழ்.மாவட்ட மாணவர்கள் சர்வதேச மட்டத்தில் கலந்து கொள்ளக்கூடியதான வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும் என்றார்.



புத்தாக்குனர் கழகத்தின் வட பிராந்திய இணைப்பாளர் செல்வி பி.ஸ்ரீ கீதா தெரிவிக்கையில்:-

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கண்காட்சிகளில் மாணவர்களின் கண்டுபிடிப்புக்கள் இடம்பெற்றிருந்தபோதும் அவற்றிற்கு உரிய சட்ட அங்கீகாரங்கள் இன்மையால் மாணவர்களின் கண்டு பிடிப்புக் கள் இலைமறை காயாகி விட்டது. இந்த நிலை மாறக் கல்விப் புலத்தில் உள் ளவர்கள் மட்டுமன்றி தகவல் தொடர்புச் சாதனங்களும் மாணவர்களுக்கு உற்சாகம் அளிக்கும் வகையில் செயற்பட வேண்டும்.இன்று நடைபெறவுள்ள புத்தாக்கக் கண்காட்சியில் மாணவர்கள் மட்டுமன்றி வர்த்தகர்கள், தொழிலதிபர்கள், பொதுமக்கள் எனப் பல தரப்பட்டவர்களும் கலந்து கொண்டு பயன்பெறவேண்டும் என்றார்.

பிராந்திய இணைப்பாளரும் மாகாண கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளருமான வீ.ஸ்ரீஸ் கந்தராஜா தெரிவிக்கையில்:-



யுத்த காலத்தில் எமது தேவைக்காக பல்வேறு பொருள்களை பயன் படுத்தியுள்ளோம். கண்டுபிடிப்பில் பொருள்களின் தரத்தன்மை முக்கியம். நேரத் தேவையையொட்டி உரிய செலவுகளை இயங்கு நிலைக் கேற்ப செலவிடல் நல்லது. கண்காட் சியை பிரபலப்படுத்துவதன் மூலம் மாணவர்கள் தமது ஆற்றல்களை மேம் படுத்தலாம். ஊடகங்கள் இதற்கு துணை செய்யவேண்டும் என்றார்.

புலமைச் சொத்து அலுவலக அதிகாரி திருமதி நந்தி இராசரத்தினம் தெரிவிக்கையில்:-



யாழ்மாவட்டத்தில் புத்தாக்கம் முறையான சட்டரீதியாக செயற்படவில்லை. இதனால் இங்கு மாணவர்களால் கண்டு பிடிக்கப் படும் புத்தாக்க விடயங்கள் வெளியுலகிற்குத் தெரிவதில்லை. ஒரு கண்டுபிடிப்பாளர் சட்டரீதியாக அணுகும் பட்சத்தில் அவரது உரிமை பாதுகாக்கப்படும். இங்கே ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட பல பொருள்கள் சட்ட ரீதியான அணுகு முறை பற்றி அறியாத காரணத்தால் வேறு பலரால் சந்தைப்படுத்தப்பட்டதும் உண்டு. யாழ்ப்பாண மக்களின் அறிவு உரிய முறையில் பேணப் படக் கூடியதாக கண்டு பிடிப்பாளர்கள் எம்முடன் தொடர்பு கொள்ள வேண்டும். மாணவரின் கண்டுபிடிப்பு குறித்து அதிபரும் ஆசிரியரும் சட்ட ரீதியான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றார்.

யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் துறைத் தலைவர் கலாநிதி என்.சிவயோகன் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம், வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கே.பொன்னம்பலம் ஆகியோரும் கருத்துரை வழங்கினார்கள்.

(50–111)

# இடைவெளியை ஏற்படுத்தியுள்ள கானமூர்த்தியின் இழப்பு

## நல்லை ஆதீன முதல்வர் அஞ்சலி

யாழ்ப்பாணம்,செப்.16

யாழ்ப்பாண இசைப் பாரம்பரியத்தில் நிரப்பமுடியாத இடைவெளியாக கானமூர்த்தியின் இழப்பு அமைந்துள்ளது.

நாதஸ்வர வித்துவான் வி.கே. கானமூர்த்தியின் மறைவையொட்டி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வி.கே.கானமூர்த்தியின் மறைவு அனைவருக்கும் மனவேதனையைத் தந்துள்ளது. இசை உலகில் தனக்கென ஓர் இடத்தை வகுத்துக்கொண்ட கானமூர்த்தி இலங்கைத் திருநாட்டில் நாதஸ்வரக் கலைஞர்களின் வரிசையில் நாதஸ்வர இசைமூலமாக எல்லோருடைய மனதிலும் இடம்பிடித்துள்ளார்.

ஆலயங்களிலும் பொதுஇடங்களிலும் நாதஸ்வர கச்சேரி செய்யும் பொருட்டு இசையைக் கையாளும் முறைபற்றித் தெரியாதவனையும் அசைய வைக்கும் இசை இவருடையது.

யாழ்ப்பாண இசைப் பாரம்பரியத்தின் நாதஸ்வர இசையில் நிரப்ப முடியாத இடைவெளியாயிற்று. சிரித்த முகம் எல்லோரோடும் இனிமையா கப் பழகும் சுபாவமும் உள்ள கானமூர்த்தியின் மறைவு எவ்வகையிலும் நிரப்ப முடியாதொன்றாயிற்று. கானமூர்த்தியின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்- என்றுள்ளது. (1)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 01 | 17.09.2008 |
| | புதன்கிழமை |
| திதி: | துதியை |
| | பி.ப. 12.55வரை |
| நட்சத்திரம் : | ரேவதி |
| | மு.இ.10.39 வரை |
| [illegible] | [illegible] |
| [illegible] | 12.03-01.33 |

# இந்தியர் ஒருவரின் சடலம் நெடுந்தீவில் கரை ஒதுங்கியது

யாழ்ப்பாணம், செப்.16

நெடுந்தீவுக் கடற்கரையில் இந்தியர் ஒருவரின் சடலம் கடந்த ஞாயிற்றுக் கிழமை கரை ஒதுங்கியுள்ளது.

நண்டு பிடிக்கச்சென்ற மீனவர் ஒருவர் கொடுத்த தகவலின் பேரில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவன் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

சடலத்துடன் மீட்கப்பட்ட தேர்தல் ஆணையாளரால் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டை மூலம் பட்டேல் கோவிவாஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளது. அவரது தந்தையின் பெயர் கேசல்லால் 1.1.94 அன்று அவரது வயது 63.

அவரிடம் இருந்து சிறுபிள்ளைகளின் மூன்று படங்களும் திறப்புக் கோர்வை, இந்தியக் கரன்ஸிப்பணம் ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

"2/25, டிம்முசா, காலே, மேசன மாவட்டம்" என்ற விலாசத்தை உடைய அவரது அடையாள அட்டை இல. G.J./12/080/153409 ஆகும்.

15.1.95இல் அந்த அடையாள அட்டை விநியோகிக்கப்பட்டுள்ளது.

5'5" உயரமுடைய அவரது கையில் சிவப்பு நூல் கட்டப்பட்டிருந்தது.

விசாரணைக்கான ஏற்பாடுகளை நெடுந்தீவு பொலீஸ் பொறுப்பதிகாரி துமுத்து பெரேரா மேற்கொண்டிருந்தார்.

சடலத்தை யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டார். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா படைத்தளத் தாக்குதலில் ஈடுபட்ட கரும்புலிகள் மூவர் தப்பினர்

கொழும்பு, செப். 16

வவுனியாவில் படைத்தளம் மீது தாக்குதல் மேற்கொள்ள வந்த விடுதலைப் புலிகளின் அணியிலிருந்து மூவர், தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்த போது தப்பிச் சென்றுள்ளார்கள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வவுனியா படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் தொடர்பாக இணையத்தளம் ஒன்று மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

சம்பவம் நடைபெற்ற அதிகாலை 3 மணியளவில் வவுனியா படைத்தளத்திற்குள் ஊடுருவிய புலிகளின் 14 பேர் கொண்ட அணி, தளத்தின் உட்பிரதேசத்தினுள் சென்றவேளை இராணுவத்தின் இரண்டு பட்டாலியன் படைகள் தங்கியிருந்த மண்டபத்தைத் தாண்டிச் செல்லும் போது புலிகளின் அணி மீது இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொண்டனர். இராணுவத்தின் சீருடை அணிந்தவாறு படைத்தளத்தின் வாசலில் இராணுவத்துடன் சிங்களத்தில் பேசிவிட்டு உள்ளே நுழைந்த புலிகளை, படைத்தளத்தின் உள்ளே இருந்த படையினர் சந்தேகப்பட்டு தாக்குதல் நடத்தினர்.

தரைத்தாக்குதல் ஆரம்பமான உடனேயே உள்ளே நுழைந்த புலிகளின் அணியிலிருந்த ஒரு சிலர் மரங்களின் மேல் ஏறியிருந்தவாறு படைத்தளத்தின் சரியான இருப்பிடம் குறித்த விவரங்களை ஜி.பி.எஸ். மூலம் கணித்து செய்மதித் தொலைபேசி மூலம் தமது ஆட்லறி ஏவு தளத்துக்கு அனுப்பினர்.

முதல் நாள் இரவு ஓமந்தைக்கு கிழக்குப் பக்கமாக தமது ஆட்லறிகளை நகர்த்தியிருந்த புலிகளின் கிட்டு ஆட்லறிப் பிரிவினர் அந்தத் தகவல்களைப் பெற்று ஆறு, ஏழு நிமிடங்களுக்குள்ளேயே தமது ஆட் லறித் தாக்குதலை ஆரம்பித்தனர். புளி யங்குளம் பகுதியிலிருந்து சுமார் இரண்டு 130 மில்லி மீற்றர் ஆட்லறிகள் மூலம் புலிகள் இத்தாக்குதலை மேற்கொண்டிருந் தனர்.

### படைத்தளத்திற்குள் 70 ஷெல்கள் வீழ்ந்தன

சுமார் 60 முதல் 70 ஆட்லறி ஷெல்கள் படைத்தளத்திற்குள் வீழ்ந்து வெடித்தன. தாக்குதல் முடிவடைந்து படைத்தளச் சுற்றுப்புறங்கள் உட்பட வவுனியாவின் பல பிரதேசங்கள் படையினரால் தீவிர தேடு தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த சமயம் அன்று மாலையும் படைத்தளத்திற்குள் இரண்டு ஆட்லறி எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. இத்தாக்குதலால் படைத்தளத்திலிருந்த கட்டடங்கள் சேதமடைந்தன. ட்ரக், பவுசர்கள் உட்பட படையினரின் எட்டு வாகனங்கள் முற்றாகச் சேதமடைந்தன.

படைத்தளத்திற்குள் கரும்புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் சண்டை நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் திடீரென வந்த புலிகளின் விமானங்கள் இரண்டு படைத்தளத்தின் மீது தாக்குதல் நடத்திச் சென்றன.

இந்த விமானங்கள் எட்டுக் குண்டுகள் வீசியதாக முதலில் தெரிவிக்கப்பட்டது. பின்னர் அவற்றில் மூன்று வெடிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இவை குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தாக்குதலில் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை 16 ஆக உயர்ந்துள்ளது. காயமடைந்தவர்களின் எண்ணிக்கை இரண்டு இந்தியர்கள் உட்பட 42 என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலில் உயிரிழந்த 11 கரும்புலிகளின் சடலங்களை இராணுவத்தினர் ஒப்படைத்துள்ளனர். (சி)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.16

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 8 வகுப்புகளில் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய கல்வி சீரமைப்புச் செயலமர்வு எதிர்வரும் சனிக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்தார். (202-207)

* * *

யாழ்ப்பாணம்,செப்.16

யாழ்.மாவட்ட கலை, கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

(202)

# 2006 இலிருந்து இதுவரை 11 ஆயிரம் புலிகள் பலியாம்

## இன்னும் 4 ஆயிரம் பேரே மிச்சம் என்கிறார் இராணுவத் தளபதி

2006 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் இப்போதுவரை புலிகள் அமைப்பில் 11 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இப்போது புலிகள் 4 ஆயிரம் பேர் மாத்திரமே எஞ்சியுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இராணுவத் தலைமையகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மேஜர் தர அதி காரிகளுடனான சந்திப்பின்போதே இரா ணுவத் தளபதி இதைத் தெரிவித்தார்.

80 நிமிடங்கள் இராணுவ அதிகாரிகளுடன் உரையாற்றிய சரத் பொன்சேகா, இராணுவ வெற்றி மற்றும் புலிகள் எதிர்கொண்டிருக்கும் விளைவுகள் பற்றி விளக்கினார்.

இதேவேளை, யுத்தம் தொடர்பாக செய்தி வெளியிடுவதில் ஊடகங்கள் நடந்துகொள்ளும் முறை பற்றியும் அவர் கூறினார்.

எப்படிப்பட்ட செய்திகளை வெளியிடவேண்டும், எப்படிப்பட்ட செய்திகளை வெளியிடக்கூடாது என்பவை பற்றி ஊடகங்கள் தெரிந்திருக்க வேண்டும் -என்று இராணுவத் தளபதி கூறினார். தற்போது இராணுவத்தினர் தொடர்ச்சியான வெற்றிகளைப் பெற்று முன்னேறிக்கொண்டிருக்கின்றனர்.

2006 ஜூலை மாதம் முதல் இப்போது வரை சுமார் 11 ஆயிரம் புலிகளைக் கொன்றுவிட்டோம். இன்னும் 4 ஆயிரம் பேர் மட்டுமே மீதியாக இருக்கின்றனர். அவர்களையும் அழிக்கும் நடவடிக்கையில் படையினர் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்'' - என்றார் அவர். (சி)

# கொழும்பிலிருந்து வெளியேறுக; வன்னியிலிருந்து வருக! அரசின் இரட்டைவேடத்தை சர்வதேசம் உணரவேண்டும்

## கூறுகிறார் மனோ எம்.பி.



கொழும்பு,செப்.16

வெளிமாவட்டங்களிலிருந்து வந்து தக்க காரணமின்றி கொழும்பில் தங்கியி ருப்பவர்களை வெளியேற வேண்டுமெனக் கோரும் அரசு,வன்னியிலுள்ள மக்களை அங்கிருந்து வெளியேறி அரச கட்டுப் பாட்டுப் பகுதிகளுக்கு வர வேண்டும் எனத் தெரிவிப்பது வேடிக்கையான விடயம்.

- இப்படிக் கூறுகிறார் மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டாளருமான மனோ கணேசன் எம்.பி.

அரசின் இந்த இரட்டை வேடத்தை சர்வதேச சமூகம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு,

இந்திய அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் கருத்து முரண்பாடுகள் பல இருக்கலாம். அதற்காக மக்கள் பலிக்கடாக்களாவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

வன்னிப் பகுதியில் பாரிய மனிதப் பேரவலம் நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. இதனை சர்வதேச நாடுகள் நன்கு அறியும். நீண்ட காலமாக சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், ஐ.நா. அமைப்புகள் என்பன வன்னியில் வாழும் மக்களுக்கு நிவாரணங்களை வழங்கி வந்தன. எனவே, அந்த அமைப்புக்களை அரசு வெளியேற வேண்டுமெனக் கூறுவது நியாயமற்ற- அர்த்தமற்ற செயலாகும்.

தமிழ் மக்களை பாதுகாக்கவே யுத்தம் செய்கின்றோம் - என்ற அரசின் பொய்ப் பிரசாரம் தொண்டர் அமைப்புக்கள் வெளியேற் றப்படுவதன்மூலம் அம் பலமாகியுள்ளது.

தற்போது வன்னி மக்கள் அந்த அமைப் புக்களை வெளியேற வேண்டாமெனக் கதறியழுகிறார்கள். அந்த அமைப்புக்க ளும் வெளியேறினால் தம்மை யார் பாதுகாப்பார்கள் என்ற அச்சம் மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது - என்றார். (சி)

## யாழ்.கல்வி வலய பாடசாலைகளிடையே சித்திர, மெய்வன்மைப் போட்டிகள்

கோப்பாய், செப்.16

மாற்று வலுவுள்ளோர் தினத்தை முன்னிட்டு யாழ்.கல்வி வலய விசேட கல்விப் பிரிவினரால் மெய்வன்மைப் போட்டிகள், சித்திரப் போட்டிகள் என்பன யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளிற்கிடையே நடத்தப் படவுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை யாழ். கல்வி வலய விசேட கல்விப் பிரிவில் எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(202-72)

## 90 வயதிலும் மரம் ஏறும் தாத்தா!

பீஜிங், செப்.16

சீனாவில் சியாபவோ கிராமத்தைச் சேர்ந்த கு குவான்சி என்னும் 90 வயதான முதியவர், இந்த வயதிலும் அயராமல் மரம் ஏறி வருகிறார். சிறு வயதில் இவரது குடும்பம் வறுமையில் தவித்தது. எனவே, குடும்பத்தைக் காப்பாற்ற மரம் ஏறும் தொழிலைச் செய்தார். அதுவே அவருக்கு மிகவும் பிடித்த காரியமாகி விட்டது.

எனினும் இந்த வயதில் அவர் மரம் ஏறுவதை அவரது குடும்பம் விரும்பவில்லை. உயரமான மரங்களில் ஏற அவருக்குத் தடை விதித்துவிட்டது. குட்டையான மரங்களில் ஏறுவதற்குக் கூட ஏணியைப் பயன்படுத்துமாறு குடும்பத்தினர் அறிவுரை கூறி வருகின்றனர்.

கு குவான்சி இந்த அறிவுரையை ஏற்கவில்லை. குடும்பத்தினருக்குத் தெரியாமல், மலைப் பகுதியில் சுற்றித் திரிகிறார். அங்கு 30 முதல் 60 அடி உயரம் கொண்ட மரங்களில் ஏறி, தனது தாகத்தைத் தணித்துக் கொள்கிறார்.

இவர் குடும்பத் தோட்டத்தில் பாக்கு மரங்களை வளர்த்து வருகிறார். அந்த மரங்களில் ஏறுவது, இவருக்குப் பிடித்த பொழுதுபோக்கு. பாக்கு மரத் தோட்டத்தை விளையாட்டு மைதானமாகக் கருதி பொழுதுபோக்கி வருகிறார். தன்னால் ஏறமுடியாத மரமே கிடையாது என்றும் இவர் பெருமையடித்துக் கொள்கிறார்.

## யோகாசன வகுப்பு

கந்தர்மடம், செப்.16

நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் புதிய யோகாசன வகுப்புகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

இலவசமாக நடைபெறும் இவ்வகுப்பில் பயிற்சி பெற விரும்புபவர்கள் பெயர்களை பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-77)

## இயற்கைப் பசளை ஊக்குவிப்புத் திட்டம்

கோப்பாய், செப்.16

சிறுப்பிட்டி மேற்கு, புத்தூர் கிழக்கு ஆகிய கிராமஅலுவலர் பிரிவுகளில் இயற்கைப் பசளையை ஊக்குவிக்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இதற்கென அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தெரிவு செய்யப்பட்ட 30 பயனாளிகளுக்கு நல்லின விதைகள் மற்றும் விவசாய உபகரணங்களை வழங்கவுள்ளது.

உபகரணங்கள் மற்றும் விதைகள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சிறுப்பிட்டி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(202-207)

## மரண அறிவித்தல்

### செல்லையா குலசேகரம் (குணம்)



அச்சுவேலி இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய செல்லையா குலசேகரம் (குணம்) நேற்று (15.09.2008) திங்கட்கிழமை கனடாவில் காலமானார். இவர் குலசேகரம் மனோன்மணியின் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
நா.சிவநேசன்
(சகலன்).

யாழ்ப்பாணம்.
கனடா T.P.NO 0019052793112 (78455)


## 23 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 15.05.1926
மறைவு 25.08.2008

கடந்த 25.08.2008 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் முருகேசு நடராசா (நடேசு)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (16.09.2008) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காளிகோவிலடி,
ஏழாலை மத்தி, ஏழாலை.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

இசற் ஸ்கோரால் கொழும்பு மாணவருக்கே அதிக பாதிப்பாம்

# போர் முடிவுக்கு வந்தால் யாழ். பல்கலைக்கழகம் இலங்கையின் சிறந்த பல்கலைக்கழகமாக மாறும்

## மானிய ஆணைக்குழுத் தலைவர் கருத்து

யாழ்ப்பாணம், செப்.16

இந்த நாட்டில் தொடரும் போர் முடிவுக்கு வந்தால் இலங்கையிலேயே சிறந்த பல்கலைக்கழகமாக யாழ். பல்கலைக்கழகம் விளங்கும் வாய்ப்பு உருவாகும்.

பல்கலைக்கழகங்களின் மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இருநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்த அவர் நேற்று மாலை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். பல்கலைக்கழகம் 1974 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போது யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த புத்தி ஜீவிகளின் வேண்டுகோளுக்கு இணங்கவே ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது புத்திஜீவிகளில் பெரும்பாலானோர் வெளிநாடு சென்று விட்டனர். போர் முடிவுக்கு வந்தால் வெளிநாடு சென்ற புத்திஜீவிகளில் மிகப் பலரும் நாடு திரும்பி விடுவார்கள்.

போர் முடிவுக்கு வந்தால் யாழ். பல்கலைக்கழகம் ஏனைய பல்கலைக்கழகங்களை விட சிறந்து விளங்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

யாழ். பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தினை ஆரம்பிப்பதற்கு வள ஆளணி போதாமல் உள்ளது.

நான் தமிழர்களுடன் நெருங்கிப் பழகிய படியால் தமிழர்களின் பண்பாடு கலாசாரம் என்பவற்றை நன்கு அறிந்து வைத்துள்ளேன்- என்றும் அவர் கூறினார்.

"இசற் ஸ்கோர்" புள்ளித் தரப்படுத்தலால் தமிழ் மாணவர்கள் பெரிதும்பாதிக்கப்படுவது குறித்துக் கேட்டதற்கு-

தமிழ் மாணவர்கள் மட்டுமின்றி சிங்கள மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். கொழும்பு மாவட்டத்திலேயே கூடுதலாக மாணவர்கள் "இசற் ஸ்கோர்" முறையால் பாதிக்கப்பட்டுள்ளனர்- என்று சொன்னார். யாழ். மக்கள் எனக்கு அந்நியமானவர்கள் அல்லர்.

யாழ்ப்பாணமும் அந்நியமானதல்ல. நான் பல்கலைக்கழக மாணவனாயிருந்த போது வெளி... வந்த தமிழ்ப் படங்களை தவறாமல் பார்த்தவன் என்றார்.

யாழ்.பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்படும் சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் அச்சமின்றி இங்கு வந்து தமது கல்வியைத் தொடர்வதற்கு யாழ். மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார். (அ-120-111)

### மின்சாரம் தாக்கி இளம் குடும்பப் பெண் மரணம்

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற பெண் மின்சாரம் தாக்கி கடந்த சனிக்கிழமை மாலை 5.30மணிக்கு மரணமானார்.

கோண்டாவில் காளிகோவிலடியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான உதயசூரியன் பிரசித்தா(வயது 26) என்பவரே உயிரிழந்தவராவார்:-

யாழ் மேலதிக நீதிவான் திருமதி ஜோய் மகாதேவ சம்பவம் குறித்து விசாரணைகளை மேற் கொண்டார்.

வழமையாக, மரணமான பெண்ணின் கணவன் சட்டவிரோத மின்சாரம் பெறுவதற்கு இணைப்பை ஏற்படுத்துவார் என்றும்.

நேற்றுமுன் தினம் கணவன் வெளியில் சென்றதால் இவர் இணைப்பை ஏற்படுத்திய போது மின்சாரம் தாக்குண்டு மரணமானார் என்றும்- விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (1)

# வன்னி மக்களை அநாதரவாகக் கைவிட்டு தொண்டு நிறுவனங்கள் வெளியேறக் கூடாது

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப்.16

இடம்பெயர்ந்து அல்லற்படும் வன்னி மக்களை அநாதரவாகக் கைவிட்டு விட்டு சர்வதேச தொண்டு நிறுவனங்கள் வெளியேறக்கூடாது. அங்கிருந்து கொண்டே மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு கேட்டுள்ளது யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம். மனிதப் பேரவலத்தில் சிக்கியுள்ள மக்களைக் காப்பாற்ற அனைவரும் குரல் கொடுக்க வேண்டும் என்று கோரி நேற்று விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

யுத்தத்தின்மூலம் அனைத்துப் பொருளாதார வசதிகளையும் இழந்து அநாதாரவான நிலையில் உள்ள மக்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்களே ஓரளவு உதவிகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில் அந்நிறுவனங்களை அனைத்து நிவாரணப் பணி களையும் இடைநிறுத்தி அரசகட்டுப்பாட்டுப் பகுதிக்கு வெளியேறுமாறு கூறியுள்ளமை மனிதப்பேரவலத்தை சந்தித்துள்ள மக்களை அதன் உச்சநிலைக்குக் கொண்டு செல்லும் செயற்பாடாகும். இத்தகைய செயலானது சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் அனைத்தையும் மீறுவதாகவே உள்ளது. இத்தகைய மனிதாபிமானமற்ற செயற்பாட்டினை மனுதர்மமுள்ள எவரும் அனுமதிக்க மாட்டார்கள்.

வன்னி நிலப்பரப்பில் அரசபடைகளுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்று வருகின்ற யுத்தத்தினைத் தொடர்ந்து வன்னிமக்கள் பாரிய மனித அவலத்தை எதிர்கொண்டு வருகின்றனர். அரசாங்கம் நிலத்தைக் கைப்பற்றும் நோக்கில் செய்கின்ற போரினால் பெருமளவான மக்கள் தமது இருப்பிடங்களைவிட்டு இடம்பெயர்ந்து மரநிழல்களிலும், கொட்டகைகளிலும் வாழ்ந்துவருகின்றனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்து அல்லலுறும் மக்களை அநாதரவான நிலையில் கைவிட்டு சர்வதேச தொண்டு நிறுவனங்கள் வெளியேறாது மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை அங்கிருந்தே மேற்கொள்ள வேண்டும். மேலும் அங்கு இடம்பெறும் யுத்தத்தில் அப்பாவி மக்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படாது பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்பதை வலியுறுத்துவதுடன் பாரிய மனுக்குல அவலத்தை அனைத்துத் தரப்புகளும் தடுக்க முன்வரவேண்டும் - என்று உள்ளது (அ)

### கிராமசேவையாளர் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், செப்.16

யாழ்.மாவட்டத்திலுள்ள கிராம அலுவலர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட நெடுந்தீவு, நல்லூர், சங்கானை, தெல்லிப்பழை, கரவெட்டி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவு/ பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் யாழ்.மாவட்ட செயலகத்தில் எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் அவர்களின் தனிப்பட்ட விலாசங்களுக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று மேலதிக அரச அதிபர் ஆ.சிவசாமி அறிவித்துள்ளார்.


HSCMF SRILANKA

வலி. தென்மேற்குப் பிரதேச மாணவர்களுக்கு

நவாலி தெற்கு, கொத்துக் கட்டி வீதியில் நவாலி ஹேமலதா செல்வராஜா ஏழை நந்தைகள் ஞாபகார்த்த (HSCMF) தலைமை நிறுவனத்தில் சிறுவர் கல்வி, நூலகம், சிறுவர் விளையாட்டு, உளவளத்துறை, கலாசார செயற்பாடு, முன்பள்ளி கற்கை நெறி, சனசமூக நிலையம் என்பன உருவாக்கப்பட்டு சகல மாணவர்களும் மக்களும் பயன் பெறத்தக்க வகையில் செயற்பட்டு வருகின்றன.

* முன்பள்ளி (PRE-SCHOOL) மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு சகல வசதிகளும் (கல்வி, விளையாட்டு, சிறுவர் அபிவிருத்தி) 10.09.2008 முதல் கற்கை வழங்கப்பட்டு வருகின்றது மாணவர்களை அனுமதித்துப் பயன் பெறலாம்.

(C/554572)

நிர்வாகம் HSCMF

வாழ்த்துகின்றோம்

அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டு உடற்பயிற்சி போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்று 23 வருடங்களுக்குப்பிறகு யாழ். மாவட்டத்தில் தங்கப்பதக்கத்தைப் பெற்றதோடு யாழ். மாவட்டத்திற்கும் ஊர்காற்றுறைபிரதேசத்துக்கும் பெருமை தேடித்தந்த யா/ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மாணவமணிகளையும் அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து செயற்பட்ட அதிபர், ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் கல்லூரிச்சமூகம், பெற்றோர்கள் அனைவரையும் வாழ்த்துவதோடு அவர்கள் இனிவரும் காலங்களிலும் இனிய பல சாதனைகளைப் புரிவதற்கு இறைவனை வேண்டுகின்றோம்.

ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்றுறை.

ஊழியர் நலன்புரிச்சங்கம், ஊர்காவற்றுறை பிரதேசசபை.

(C/554693)

யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

பதவி வெற்றிடம்(01)

1.பதவி : அலுவலகத் தொடர்பு உத்தியோகத்தர். (ஒப்பந்த அடிப்படையில்)

2.தகைமைகள்:

1.தமிழ் உட்பட ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளிலும் எழுத, வாசிக்க தெரிந்திருத்தல் வேண்டும்.

2.அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3. வயது: 25 இற்கு மேல்

4.கல்வித் தகைமைகள் : க.பொ.த.(உ/த) சித்தி

5.விண்ணப்ப முடிவுதிகதி: 27.09.2008

3.சம்பளம்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

4. விண்ணப்பிக்கும் முறை

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பதிவுத் தபாலில் 27.09.2008 சனிக்கிழமைக்கு முன்னதாக தலைவர், யாழ். மாவட்டத்தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து) 215, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் "அலுவலகத் தொடர்பு உத்தியோகத்தர் ஒப்பந்த அடிப்படையில்" எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

(C/554574)

தலைவர்.

வேலையாள் தேவை

பண்ணை வேலைக்கு O/L வர்த்தகம், கணிதம், தமிழ் உட்பட சித்தியடைந்திருத்தல் வேண்டும், A/L வர்த்தகத்துறை மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

தொடர்பு:-

உதயன் பாம், நாயன்மார்கட்டு

(முறிவு நெரிவு வைத்தியசாலைக்கு அருகில்)

(78498)

தேவை

அனைத்து வெதுப்பக உள்வேலையும் மெசினறி வேலையும் தெரிந்த அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை. நேரில் சமூகம் தரவும்

கே.கே.எஸ் வீதி, மல்லாகம்.

(78501)


நன்றி நவில்கின்றோம்

சங்கரப்பிள்ளை விஜயரத்தினம்



கடந்த 15.08.2008 மரணமான எமது குடும்பத் தலைவர் சங்கரப்பிள்ளை விஜயரத்தினம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலை பேசி மற்றும் பத்திரிகை விளம்பரம் ஊடாக அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், மற்றும் பல் வேறு வகையில் உதவியவர்களுக்கும் அன்னாரின் அந்தியேட்டி கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் நன்றிகளை தெரிவிக்கின்றோம்

ரெசித்தா (வீடமைப்புத் திட்டம்), கொட்டக்கலை.

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

மரண அறிவித்தல்கள்

குமாரசாமி துரைராசா (ஒவசியர்)

(ஓய்வு பெற்ற தொழில் நுட்ப உத்தியோகஸ்தர்)



கண்டுக்குளி, சந்தனமாதா கோவில் வீதியைச் சேர்ந்த குமாரசாமி துரைராசா நேற்று (15.09.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி அன்னம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற கண்மணியின் பெறாமகனும், மங்கையர்க்கரசி (ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை)யின் அருமைக் கணவரும் மேகலா (ஆசிரியை, யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) வின் அன்புத் தகப்பனாரும் குணசிங்கம் (நீர்வேலைப் பகுதி, யாழ்ப்பாணம் மாநகர சபை) அவர்களின் மாமனாரும் அஸ்வி... பேரனும் கனகாம்பிகையின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (...2008) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.30 மணிக்கு தகனக்கிரியைக்காக ... இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

29, சந்தனமாதா கோவில் வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்: சொ.குணசிங்கம் (மருமகன்).

(79511)

கணேசையா காமாட்சியம்மா

நீர்வேலி காமாட்சியம்பாள் கோயிலடியைச் சேர்ந்த திருமதி கணேசையா காமாட்சியம்மா நேற்று (15.09.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா கணேசையாவின் அன்பு மனைவியும் திருமதி புஸ்பவதி சௌந்தரராஜன், ...ன்பநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் வளர்ப்புத் தாயாருமாவார்.

அன்னார் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காமாட்சியம்பாள் கோயிலடி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

தகவல்: புஸ்பவதி சௌந்தரராஜன் (பெறாமகள்).

(79507)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# குடா நாட்டில் இ.போ.ச சேவைகளை சீராக்குவதற்கு வசதிகள் செய்யப்படும்

## கொழும்பில் நடைபெற்ற மாநாட்டில் பல முக்கிய முடிவுகள்

கொழும்பு,செப்.16

இலங்கை போக்குவரத்து சபையின் யாழ். டிப்போக்களுக்கு தேவையான உதவி களை வழங்கி போக்குவரத்துச் சேவையை சீராக்க நடவடிக்கை எடுப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு அறிவித் துள்ளது.

குடாநாட்டின் போக்குவரத்துப் பிரச்ச னைகள் குறித்து ஆராய்வதற்கான உயர் மட்ட மாநாடு ஒன்று போக்குவரத்து அமைச் சில் நேற்று பி.ப நடைபெற்றது.

போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப் பெரும தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவும் கலந்து கொண்டார்.

இது தொடர்பாக சமூக சேவைகள் அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப் பெருமவின் தலைமையில் நடைபெற்ற மேற்படி உயர்மட்ட மாநாட்டில் யாழ் மாவட்ட இலங்கை போக்குவரத்து சபையின் டிப் போக்களின் பல்வேறு குறைபாடுகள் முன் வைக்கப்பட்டு அவற்றின் முக்கிய பிரச்சினை கள் தொடர்பில் தீர்வுகள் எட்டப்பட்டன.

இதன் பிரகாரம் யாழ் மாவட்டத்தில் இ.போ.ச பஸ் வண்டிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் முகமாக புதிதாக ஐந்து பஸ் வண்டிகளை வழங்குவதற்கும் 12 புதிய இயந்திரங்களை வழங்கி மொத்தமாக 17 பஸ் வண்டிகளை மேலதிகமாக செயற்படு வத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை , ரயர், பற்றறி, டீ.சி.ஒயில் உட்பட தேவையான பொருள்களை வழங் குவதற்கும் எரிபொருள் தேவையை பூர்த்தி செய்வற்கும் டிப்போக்களுக்குரிய இயந் திர சாலைகளுக்குத் தேவையான லேத் மெஷின், டெஸ்ட் பென்ச் போன்ற வற்றை வழங்குவதற்கும் உரிய நடவடிக் கைகளை மேற்கொள்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

பற்றாக்குறையாக உள்ள சாரதிகளுக் கான நியமனங்களை உடன் வழங்குவதற் கும் ஏனைய பணியாளர்களது குறைபாடு கள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்து உரிய நட வடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இணக் கம் காணப்பட்டுள்ளது - என்றுள்ளது.(அ)

# மடுத் தேவாலயத்துக்கு யாழ். ஆயர்

கொழும்பு, செப். 16

மடுப்பகுதியில் அண்மையில் இடம்பெற்ற மோதல்களின் பின் யாழ்.மறைமாவட்ட ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை கடந்த ஞாயிறன்று மடுத்தேவா லயத்திற்குச் சென்றுள்ளார்.

கத்தோலிக்க திருச்சபையின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக கொழும்புக்கு வந்திருந்த ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அங் கிருந்து மடுவுக்குச் சென்று தேவாலயத் தைப் பார்வையிட்டதுடன் புனரமைப்பு பணி களையும் பார்வையிட்டார்.

ஆயருடன் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் வண.பிதா விக்டர் சூசை மற்றும் கொழும்பு பேராயர் இல்லத்திலிருந்து அருட் தந்தையர்கள் சிலரும் அங்கு சென்றிருந்தனர்.

அதேவேளை, பூசை வழிபாடுகளில் பங்கு கொள்ள அருட்சகோதரிகள் குழுவொன்று மன்னாரில் இருந்து மடுத் தேவாலயத்துக்குச் சென்றுள்ளது என மன்னார் ஆயர் இல்லம் தெரிவித்துள்ளது.

மடு மாதா தேவாலயத்தை புனரமைப்பதற் காக கிறிஸ்தவ விவகார அமைச்சு ஒரு கோடி 60 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது என தெரி விக்கப்படுகிறது. ஆனாலும், கத்தோலிக்க திருச்சபையின் நிதியின் மூலமே தற்போது குறைந்தளவு புனரமைப்பு பணிகள் இடம் பெறுகின்றன என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)

## ஐரோப்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இழக்க நேரிடலாம் என ஐரோப்பிய ஒன் றியம் கவலை வெளியிட்டுள்ளது.

மனிதாபிமான உதவி மற்றும் அபிவி ருத்திக்கான ஐரோப்பிய ஒன்றிய ஆணை யாளர் லூயிஸ் மைக்கல் இதனைத் தெரி வித்துள்ளார்.

மனிதாபிமானப் பணியாளர்களின் பாது காப்பை உறுதிப்படுத்த முடியாத தால் சர்வதேச நிவாரணப் பணிகளை இடை நிறுத்த வேண்டிய சூழல் உருவாகியுள் ளமை நிலைமையை மேலும் மோசமாக் கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## லொட்ஜுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடாக கடந்த சனிக்கிழமை அறிவித் தார். அது சம்பந்தமான உத்தியோகபூர்வ அறிவித்தல் வருவதற்கு முன்னரே பொலி ஸார் நேற்று தமது வேட்டையில் இறங்கி விட்டனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள தமிழர்களை விடுவிக்கும் முயற்சியில் பிரதியமைச்சர் பெ. இராதாகிருஷ்ணன் ஈடுபட்டுள்ளார் என அமைச்சரின் அலுவலகம் தெரிவித் தது. கைதுசெய்யப்பட்டவர்களில் ஒரு சிலர் நேற்று மாலை விடுவிக்கப்பட்ட துடன், உடனடியாகவே கொழும்பில் தங்கியிருக்காது சொந்த இடங்களுக்கு திரும்பவேண்டும் என பொலிஸாரினால் வலியுறுத்தப்பட்டனர் எனவும் தெரிவிக் கப்படுகிறது. (அ)

## அம்பாறை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐவர் காயமடைந்துள்ளனர் எனத் தெரி விக்கப்படுகின்றது.

இது தொடர்பில் அம்பாறை மாவட்ட விடு தலைப் புலிகள் கூறியுள்ளவை குறித்து இணையத்தளச் செய்தி தெரிவித் திருப் பவை வருமாறு:-

கஞ்சிக்குடிச்சாறு வனப்பகுதியில் உள்ள உடும்பன் குளம் சிறப்பு அதிரடிப் படை யினரின் முகாம் மீது கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை 7.10 மணியளவில் மோட் டார் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலில் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த ஒரு வர் கொல்லப்பட்டார். ஐவர் காயமடைந் தனர் என்று அதில் உள்ளது.

## வன்னி மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி நேற்று திங்கட்கிழமை செய் தியாளர்களிடம் இதனைத் தெரிவித்துள் ளார்.

''வன்னியில் இராணுவ நடவடிக் கையில் சிக்கியுள்ள மக்கள் குறித்த எமது கவலையை நாங்கள் ஏற்கனவே இலங்கை அதிகாரிகளுக்கு தெரிவித்து விட்டோம்" என இந் திய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள் ளார்.

''விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை மேற்கொள் ளும் போது இலங்கையின் தமிழ் பொதுமக் களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், அவர்களது பாதுகாப்பை உறு திப்படுத்த வேண்டும்'' - என்றும் அந் தோணி குறிப்பிட்டுள்ளார். (சி)

## அக்கராயனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சமரின்போது மூன்று பி.கே.எல். எம்.ஜி, ஒரு எல்.எம்.ஜி., டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் உட்படப் பெருமளவு ஆயுதத் தளபாடங்களைத் தாங்கள் கைப்பற்றி யுள்ளனர் எனவும் உயிரிழந்த இராணுவத் தினரின் சடலங்கள் களமுனையில் சிதறிக் கிடக்கின்றன என்றும் புலிகள் தரப்பில் கூறப்பட்டது. இந்தத் தாக்குதல் தொடர் பாக இராணுவத் தரப்புத் தகவல்களை நேற்று மாலைவரை பெறமுடியவில்லை.

### செஞ்சிலுவை அலுவலகத்துக்கு சமீபமாக ஷெல்கள் வீழ்ந்தன

இதேவேளை - முறிகண்டிப் பகுதியை அண் டியுள்ள ஏ - 09 வீதிப்பகுதி நோக்கி நேற் றுக்காலை இராணுவத்தினர் ஆட்லறி மற் றும் பல்குழல் ஷெல் தாக்குதலை மேற் கொண்டனர். இதன்போது ஒருவர் காய மடைந்தார். முறிகண்டிக்கு சமீபமாக, செஞ் சிலுவை சர்வதேசக் குழுவின் அலுவலகம் அமைந்துள்ள 55 ஆம் கட்டைப் பகுதிக ளிலும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. இதனால் அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந் தனர். ஏ- 9 வீதி ஊடான போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது. (த-ற-10)

## யாழ்.உயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதை உறுதி செய்வதற்காக மிகுந்த கண் காணிப்பு மற்றும் ஆய்வின் பின்னர் உரிய குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு அனுமதிக்கப்பட்டு வருகின்றன என இவ் விடயத்தை கையாள நியமிக்கப்பட்ட - யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி உள்ளடங் கிய - குழுவின் சார்பில் நேற்று உயர்நீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

## ஐ.நா.தொண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணியில் கிளிநொச்சியில் இருந்து அழைத் துவரப் போகின்றோம். எங்களின் பணியா ளர்கள் மற்றும் வாகனங்களுக்கு விடுத லைப் புலிகள் ஓமந்தைச் சோதனைச்சாவ டிவரை பாதுகாப்புத் தருவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

தற்போது உள்ள சூழலின் படி தொடர்ந்து கிளிநொச்சியில் தங்கி பணி யாற்றுவது என்பது மிகவும் ஆபத்து நிறைந்தது என எங்களின் பாதுகாப்பு மதிப்பீட்டில் தெரிய வந்திருக்கிறது. இதனால், நாங்கள் இங்கி ருந்து தற்காலிகமாக வெளியேறும் சூழ் நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றோம்.

எங்களது மனிதநேயப் பணிகளை வவுனியாவிலிருந்து செய்வதற்காக மூத்த அதி காரிகள் ஏற்கனவே அங்கு அனுப்பப்பட் டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள், நாங்கள் வெளி யேறிச் செல்லலாம் என்று எங்களுக்கு உறு தியளித்திருக்கிறார்கள். உலகின் ஏனைய பகுதிகளில் இருக்கும் நடை முறைகளின் படி ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியை யார் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருக் கிறார்களோ அவர்களே அங்கு பணிசெய்யும் மனிதநேயப் பணியாளர்களின் பாதுகாப் புக்கு உத்தரவாதம் அளிக்கவேண்டும். இந்த விடயத்தை நாங்கள் புலிகளுக்குத் தெளிவாக உணர்த்தியுள்ளோம்.

தொடர்ந்து நாங்கள் அங்கு தங்குவது ஆபத்தானது என்று விடுதலைப் புலிக ளிடம் கூறினோம். பின்னர், நாங்கள் வெளி யேறலாம் என்ற உத்தரவாத்தை புலிகள் எங்களுக்கு அளித்திருக்கின்றனர்.

கிளிநொச்சியில் உள்ள எமது அலு வலகங்களுக்கு அருகில் தொடர்ந்து ஷெல் கள் விழுந்தவண்ணம் உள்ளன. விழும் ஷெல்கள் பெரும்பாலும் அரச கட்டுப் பாட்டுப்பகுதியில் இருந்துதான் வந்திருக் கக்கூடும் என நான் நினைக்கின்றேன்.

அங்குள்ள சிவிலியன்கள் தொடர்பில் எமக் குப் பெரும் கரிசனை இருக்கிறது - என்றார்.

## இம்மாதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னியில் இருந்து வெளியேறுமாறு நாம் விடுத்த உத்தரவை ஏற்று பல அரச சார் பற்ற நிறுவனங்கள் அங்கிருந்து வெளி யேறி அரச கட்டுப்பாட்டுப் பகுதியான வவு னியாவுக்கு வந்துள்ளன.

சில நிறுவனங்கள் இன்னும் அங்கு தங் கியுள்ளன. வெளிநாடுகளில் இருந்து வந்து வன்னியில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அரசுடனேயே கொள்கை ரீதி யானஇணக்கப்பாட்டின்கீழ்செயற்படுகின்றன.

அந்த இணக்கப்பாட்டை - நல்லெண் ணத்தை -மீறி- அந்நிறுவனங்களால் செயற் பட முடியாது. அது அவர்களுடன் நாம் வைத் திருக்கும் நல்லபிப்பிராயத்தில் சிக்கலை ஏற்படுத்தும்.

வன்னிக்குச் சென்ற அரச சார்பற்ற நிறு வனங்கள் தாம் கொண்டு சென்ற உடை மைகள் தொடர்பான விவரங்களை ஏற்க னவே எமக்குத் தந்திருந்தன.

அந்நிறுவனங்கள் திரும்பிவரும்போது அந்த உடைமைகள் சோதிக்கப்படும். அவற் றுள் குறைபாடுகள் எவையும் இருந்தால் அவை தொடர்பாக அந்நிறுவனங்கள் அர சுக்கு விளக்கமளிக்க வேண்டும்.

இருப்பினும், அனைத்து உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங் களும் இம் மாதம் 29 ஆம் திகதிக்கு முன் னர் வன்னியில் இருந்து வவுனியாவுக்குத் திரும்பிவிட வேண்டும்.

அரசின் இந்த உத்தரவை மீறிச் செயற் படும் நிறுவனங்களுக்குஎதிராகக் கடும் நடவ டிக்கை எடுக்கப்படும். அந்நிறுவ னங்களின் பாதுகாப்பிற்கான பொறுப்பை யும் நாம் ஏற்கமாட்டோம் - என்றார். (அ-சி)

## மரண அறிவித்தல்

### திருமதி எலிசபெத் ஆசீர்வாதம்

செம்பியன்பற்றை பிறப்பிடமாகவும் இத்தாவில் பளை யை வசிப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட எலிசபெத் ஆசீர்வாதம் (15.09.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நிக்லஸ் ஆசீர்வாதத்தின் அன்பு மனைவியும், அருளானந்தத்தின் பாசமிகு சகோதரியும் யாக்கோபு, வரப்பிரகாசம், ஞானமலர், அன்னமலர், அந்தோ னிப்பிள்ளை (டென்மார்க்), ஞானப்பிரகாசம் (யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக் கோட்டை), பரிமளமேரி, பார்பரா, துவக்கீன் (டென்மார்க்), மரியறீற்றா (ஆசிரியர் நாவற்குழி ம.வி), ஆகி யோரின் பாசமிகு தாயாரும் செல்வநாயகி, மனோகரசீவி, ஜேசுதாஸ், ஆறுமுகம், புஸ்பராணி, றெஜினாகிரேஸ், தனபாலசிங்கம், ஜோர்ச் குயின்மேரிகிறேஸ், அன்ரனிதாஸ் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இரங்கற் திருப்பலி 17.09.2008 புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் நவாலி சென்பீற்றர்ஸ் தேவால யத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு நவாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பழைய வைத்தியசாலை வீதி, வட்டுக் கோட்டை. (A)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

கணித விளாத்தார்
தரம் 3 - O/L வரை
Easy way
way to win
Try to win
13,14,15,16ம்
விளாத்தள்கள் பேறலம்.
கற்சுமி வெளியீடு
166, நாவலர் வீதி, யாழ்.
T.P. 7442

வாங்கி விட்டீர்களா?
தரம் 1 அம்மா
தரம் 2 அன்னை
தரம் 3 தாய்
தரம் 4 அறிவு
தரம் 5 தேடல்
தரம் 9 Talent
தரம் 11 Target
கற்சுமி வெளியீடு

ஏசியன் தளபாட நிலையம்
வீட்டுப் பாவனைக்குரிய தளபாடங்கள். அலுவலக பாவனைக்குரிய தளபாடங்கள் மற்றும் பிளாஸ்ரிக் கதிரை வகைகள் அனைத்துவிதமான மெத்தை வகைகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
உள்நாடு மற்றும் வெளிநாட்டிற்கான பொதிகள், ஆவணங்கள் குறைந்த கட்டணத்துடன் மூன்று நாள்களிற்குள் பாதுகாப்பாக அனுப்பிவைக்கப்படும்.
★ லண்டன், சுவிஸ், பிரான்ஸ் - 1Kg பொதிக்கு 750/=
★ கனடா - 1Kg பொதிக்கு 850/=
தொடர்பிற்கு:
யாழ்ப்பாணத்தில்: ஏசியன் தளபாட நிலையம், 133, மின்சார நிலைய வீதி (பஸ் நிலையம் அருகில்), யாழ்ப்பாணம். T.P.: 021 222 7892 asian_133@yahoo.com
கொழும்பில்: மாருதி ஏஜென்ட், வெள்ளவத்தை, கொழும்பு - 06. T.P.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses...
* Dip In Computerized Accounting
(Tally, Accpack, MYOB, QuickPro)
## MS Office ## DTP *V.B, VB.net
* Hardware * Web Designing
* Video Editing *AutoCAD *3D Designing
International Courses...
*MCP *MCSE *MCSA
*CCNA *CCNP *N+ *A+
Degree Course * BIT Semester 1,3 & 5
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம் MCS
Supported By UNDP/JRRP

விற்பனைப் பிரதிநிதி
உலகப் புகழ்பெற்ற Japan நிறுவனத் தின் கணனிவகைகளை (Laptop) யாழ்ப் பாணத்தில் விற்பனை செய்வதற்காக துடிப் புமிகு ஆர்வமுள்ள திறமையான இளைஞர் களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க் கப்படுகின்றன. ஆர்வம் மிக்க இளைஞர் கள் சுயவிபரத்துடன் தொடர்பெண் என்ப வற்றைக் குறித்து ஏழு நாள்களுக்குள் த.பெ. எண் 158, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.